381

# விவேக போதினி

" எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { நள ௵ சித்திரைமீ : 1916-௵ மேமீ } பகுதி 11

## பழமொழிப் போதம்

### PROVERBS EXPLAINED

யாவனொருவன் இதயநிலை யெவ்வணமாம்
லவறும்வ் வன்ன முபதேசம்—ஈவன்
புனைந்தா ரியவுருவம் பூரணன்ஆங் கின்பாம்
'மனம்போலும் மங்கலநாண்' மன். (79)

'விளக்கிருக்கத் தீத்தேடல்' மெய்ஞ்ஞா னியைக்
கண், குளத்துணர்ந்துஞ் சத்துவமா யொன்றித்—
துளக்கில், விருத்தியைக் கொண் டெய்தாது வேறு
வகையால், அருத்தியொடு தெய்வந்தே டல். (80)

திலக வாரியன் சீடனுள் மையலை
கலிவு செய்கில னாகினும் நம்பினோன்
மலமொ ழிந்திடும் மற்றிவன் அன்பினால்
' புலிகொ லாவிடி னுங்கிலி கொல்லுமே.' (81)

அதிட்ட பலதாதா வாமீசன் றெண்டின்
மதிக்கிற் றிருட்டபல வள்ளாற்—பதிக்குச்செய்(னுக்
ஏவலுயர் வன்னேன்மெய் யின்னேன் 'மருத்துவ
கிவ்தனை வாணியனுக் கே.' (82)

' அளவின் மிகுந்தால் அமுதமும்நஞ் சா'தல்
தெளிக குரிர்காய்வார் தீயின்—உளியுதல்போல்
எண்குருவை யன்பச்சத் தெய்தல் சாணச்சப்
பண்பிலதேல் நண்பரிது பார். (83)

' கோவில் விளங்கக் குடிவிளக்கு மென்'றிடலோ
பூவிற் பரஞானி பூசனையோ—டேவல்
புரிவார் கரணமெலாம் பொங்கு புனி தத்தாற்
பிரியாநல் லின்பம் பெறல். (84)

பகர்'பழம்புண் ணாளிமுழுப் பண்டிதனே' மா
யைச், சகமொ ருங்கு மென் றமிடர் தானென்—றக
முணர்ந்து, முன்னர் விசா ரம்பின் மூதிர்ந்து
தனைக் கண்டோனே, மன்னிறையாய்த் தேற்றுமதன்
மாய்வு.' (85)

'சுண்ணத்தின் மேய து ஞக்கங்'குருவின் சொலால்
மவுனம், எண்ணத் துகிற்குசெய்ச் சிக்குத் தமமா
சிராசதம்போய், வண்ணத் தவளநற் சாந்த மிகநால்
வழிவெற்றிலை, திண்ணத்தன் றுட்பாகு சேர்ந்தநு
பூதிச் சிவப்புறவே.' (86)

செப்பத் தேயுப தேசத் துணையளித்
தொப்பத் தன்னை யுணர்த்தும் பரன்கணே
துப்புத் றேவுந் துணையும் விருத்திசேர்
'உப்பிட் டாரை யுளவரை யுள்கவே.' (87)

' இடிசுவரின் முட்டுச்சா ளேசுரமோ' பல்கால்
படிமிசையின் மாய்வுற்றுப் பாழாந்—தடியுடலைத்
தானென் று நம்பத் தகுமு டமுமுளதோ
வனிந்த மோகமனத் தே. (88)

' பண்டைத் தற்பிர மத்தியல் நித்திய பரிசுத்தா
கண்டச் சத்திய சித்சுக பூரண கனமேதான்
தொண்டற் றத்திக மூந்தனி யான்மசொருபங்காண்
'ஆண்டத் துற்றது பிண்டத்தும்'மென வறிவீரே.

'தேரை கறிப்பதுவோ செட்டிபடை வெட்டுங்கோல்'
ஒருமிடத் தின்றி யொழியவித்தை—யீருவதோ
தோற்றமா மாயைத் தொகுகா ரியங்களிடர்
ஆற்றிடுமோ சான்று யதை.' (90)

' தாயைப்போ லும்பிள்ளை தந்தைப்போ லுஞ்
சேலை', மாயைச்சான் றுமீசன் வாய்மை யெனக்—
காயத்திற், சான்றே யுயிருண்மை சார்மாயை போற்
சகமும், தான் றேரின் இல்லாத தாம். (91)

# நளஞு ஆடிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தஜ | இங் | தமிழ் | வார | நளஞு ஆடிமீ { சாலிவாகன 1838 கலியுகாதி 5017 பசலி 1326 கோல்லம் 1091 { ஹிஜரி 1334 } 1916ஞு ஜூலைமீ ஆகஸ்டுமீ |
|---|---|---|---|---|---|
| பு | 14 | 16 | 1 | ஞா | பிர 6-34, திரு 52-8, விஷ் 8-8, கௌ 6-34, திவி 5-20, அக 31-28, ஆஷா-பகு-புன 3 புத 17-48, சூன்யதிதி ஆடிப் பண்டிகை சிர உப ஸ்மார்கம் [திதி கரிநாள் |
| சு | 15 | 17 (ஆடி) | 2 | திங் | துதி 0-45, திரு 54-37, அவி 48-43, பிரி 0-28. ஆய 53-2, கர 0-45, திவி 1-34, திரு 4 வக்-சுக் 27-30, சூன்ய |
| ரசெ | 16 | 18 | 3 | செ | சது 50-37, சத 45-51, ஸௌ 47-4, பவ 22-59, திவி 5-51, பூச க ரவி 39-8, உத் 3 செ 50-0, கடகபுத 9-45, |
| பு] | 17 | 19 | 4 | புத | பஞ் 46-44, பூரட் 43-50, சோ 41-19, கௌ 18-40, திவி 1-19, மழை 4க்குள் [கட திருசதுர்துதிதி சங் சது |
| கு | 18 | 20 | 5 | வியா | சஷ் 43-48, உத்தி 42-45, அதி 36-20, கர 15-16, திவி 7-24, அக 31-26, பூச 1 புத 3-2, அசு 4 குரு 23-26, |
| பு | 19 | 21 | 6 | வெ | சப் 41-57, ரேவ 42-46, சுக 32-13, பத் 12-52, திவி 12-45, பூச 2 புத 57-10காளாஷ்ட |
| ரச | 20 | 22 | 7 | சனி | அஷ் 41-21, அசு 43-59, திரு 29-4, பா 11-39 ரா 2-21, பூச 2 ரவி 36-35, பிராகுதய சனி 18-10, |
| பு | 21 | 23 | 8 | ஞா | நவ 42-0, பர 46-26, சூல 26-55, தை 11-40, திவி 8-58, பூச 3 புத 49-15, மழை 7-க்குள் |
| செசு | 22 | 24 | 9 | திங் | தச 43-55, * கார் 50-7, கண் 25-46, வணி 12-57, திவி 18-16 அக 31-23, சிம்மாய 51-14, உத்தி 4-செ 20-20, திரு 3, வக்சுக் 39-12, கார் உப |
| பு | 23 | 25 | 10 | செ | ஏகா 46, 59, ரோ 54-54, விர் 25-33, பவ 15-27, ரா 1-55, பூச 4 புத 5.15, சர்வ ஏகா கரிநாள் |
| ர | 24 | 26 | 11 | புத | துவா 50-54, மிரு 60-0, தரு 26-5, சௌ 18-56, திவி 10-13, பூச 3 ரவி 7-7, சிலவிடங்களில் வெள்ளப்பெருக்கு |
| பு | 25 | 27 | 12 | வியா | திர 55-33, மிரு 0-32, வியா 27-12, கர 23-13, திவி 23-43. ஆயி 1 புத 24-25, பிரதோ [ஞல் கெடுதல் உண்டு |
| ச | 26 | 28 | 13 | வெ | சது 60-0, திரு 6-47, ஹர் 28-42, பத் 27-46, ரா 8-38, அக 31-22, புன 3 சனி 30-0, மா-சி |
| ரசெ | 27 | 29 | 14 | சனி | சது 0-31, புன 13-14, வஜ் 30-15, சகு 0-31, ரா 3-56, பூச 4, ரவி 37-38, அஸ் 1 செ 51-30, ஆயி 2 புத 13-14, |
| பு] | 28 | 30 | 15 | ஞா | ● அமா 5-20, பூச 19-27, சித் 31-33, நா 5-20, ரா 23-9, இஷ்டி மழை 15-க்குள் [ஆடி அமாதீப பூ. |
| புசு | 29 | 31 | 16 | திங் | பிர 9-34, ஆயி 25-8, விய 32-23, பவ 9-34, ரா 26-12, சிரா சுத் ஆயி 3 புத 2-3, சுக்கிரவக்கிவ 40-10, சங் தரி |
| பு | 1 | 1 | 17 | செ | துதி 13-4, மக 29-57, வரி 32-28, கௌ 13-4, சே 1-32, ரா 19-54, அக 31-18, ஆயி 4 புத 51-0, (விய-சிரா |
| ர | 2 (ஆவணி) | 2 (ஆகஸ்டு) | 18 | புத | திரு 15-26, பூர 33-42, பரி 31-43, கர 15-26, ரா 21-10, ஆயி 1 ரவி 7-8 (ர்த்தி விரு |
| பு | 3 | 3 | 19 | வியா | சது 16-40, உத் 36-14, சிவ 29-58, பத் 16-40, ரா 26-24, ஸிம்மபுத 42-26, நாகசது |
| செ | 4 | 4 | 20 | வெ | பஞ் 16-34. அஸ் 37-29 ஸித் 27-11, பா 16-34, சே 1-40, ரா 26-16, அஸ் 2 செ 21-30, நாககெருடபஞ்ச சஷ்-உப கரிநாள் |
| ரபு | 5 | 5 | 21 | சனி | சஷ் 15-15, சித் 37-35, சா 23-27, தை 15-15 சே 1-31, ரா 20-5, அக 31-15, ஆயி 2, ரவி 36-33, மக 2, புத 44-44, சப் விரு |
|  | 6 | 6 | 22 | ஞா | சப் 12-47, சுவா 36 31, சுப 18-48, வணி 12-47, ரா 18-50, சீதலா சப் மழை 8 க்குள் |
| பு | 7 | 7 | 23 | திங் | அஷ் 9-16, விசா 34-32, சுப் 13-19, பவ 9-16, ரா 12-51, மக 3, புத 33-24, |
|  | 8 | 8 | 24 | செ | நவ 4-55, தச 54-54, அனு 31-43, பிரா 7-10, கௌ 4-55, ரா 13-43, |
| ரசெ | 9 | 9 | 25 | புத | ஏகா 54 12, கேட் 28-18, மா 0-22, வை 52-52, வணி 27-0, ரா 15-50, அக 31-12, ஆயி 3 ரவி 5-59, அஸ் 3, செ 41-20, மக 4, புத 23-24, திரு 4, ரிசுசுக் 9-20, ஸ்மா ஏகா வை சிரா |
| புசு] | 10 | 10 | 26 | வியா | துவா 48-14, மூல 24-29, விஷ் 45-44, பவ 21-13, திவி 20-29, ரா 15-40, வை ஏகா [பிரதோ |
| பு | 11 | 11 | 27 | வெ | திர 42-8, பூரா 20-26, பிரி 38-7, கௌ 15-11, ர 7-54, பச்சாதுதயபுத 26-10, பூர 1, புத 31-10வரலக்ஷ்மி விரு |
| ர | 12 | 12 | 28 | சனி | சது 36-5, உத்தி 16-20, ஆயு 30-32 கர 9-6, திவி 25-41, ஆயி 4, ரவி 34 48, சிர உச அகஸ்தியஉதய 34-48, |
| பு | 13 | 13 | 29 | ஞா | ◯ பௌ 30-18, திரு 12-24, ஸௌ 23-9, பத் 3-11, திவி 21-49, அக 31-8, பூர 2, புத 41-3 பூர்ணிமாதிதி ரிக் யஜு உபாகர்மம் சிரவண 1 சர்ப பலி ரக்ஷா போ பூ |
| செ | 14 | 14 | 30 | திங் | பிர 24-59, அவி 8-53, சோ 16-6, கௌ 24-59 திவி 25-59, சிரா பகு அஸ் 4 செ 52-22. பிரதமாதிதி இஷ்டி காயத்ரீஜப |
|  | 15 | 15 | 31 | செ | துதி 20-13, சத 5-53, அதி 9-33, கர 20-13, திவி 21-16, பூர 3 புத 51-4 திதித்வயம் |

|  | குரு |  | சு-பு சனி |
|---|---|---|---|
|  |  | 3-கட-புத 19-சிம்-பு | ரவி க |
| குரு |  |  |  |
|  |  |  | செ |

விவேக போதினி

தொ. 8] நள௵ சித்திரை௴ [பகுதி.11

# மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### ராஜயோகம் (ஆராய்ச்சி)

### லோகாந்தரம்

இவ்வுலகிலேற்படும் இறப்பு என்பது வேறு ஒரு தேஹத்தைப்பற்றி இங்கேயோ அல்லது லோகாந்தரத்திலேயோ ஏற்படும் ஒரு புதிய பிறப்பே என்பது விளங்கியிருக்கும். இப்படி மரணத்தின் பின் பிறந்து இன்ப துன்பங்கள் அனுபவிப்பதற்கு இடமாகிய லோகாந்தரத்தைப் பற்றிய விஷயங்களை இங்கு நன்கு எடுத்தாராய்வோம். இந்த உலக விஷயம் எல்லோருக்கும் ஒருவாறு விளங்கியிருப்பதால் அதைப்பற்றி அதிகமாக ஆராய வேண்டியதில்லை.

நாம் ஓர் அகன்ற மைதானத்திற்குப் போய் இரவில் சுற்றுமுற்றும் பார்த்தால், ஆகாயம் ஒரு பெரிய கோளார்த்தம் போலவும், அதின் மேல்புறத்தில் ஸகல நக்ஷத்திராதிகள் பதிக்கப்பட்டிருப்பது போலவும் காணப்படும். இப்படியேதான் நமக்குத் தெரியவொட்டாது பூமியால் மறைக்கப்படும் பாகமும் இருக்கும். ஆகவே,இவைகள் இரண்டையும் சேர்த்து மனத்தில் கருதுமிடத்துச் சுற்றுமுள்ள நக்ஷத்திராதிகள் எல்லாம் ஒருபெரிய கோளத்தின்மேல்புறம் அமைக்கப்பட்டுள்ளனவாகவும்,நாமிருக்கும் பூமி அதன் மத்தியிலிருப்பதாகவும் தோற்றும். மேலும் இந்த நக்ஷத்திராதிகள் இரவில் சுழன்றுவரும் ஒழுங்கை உற்றுநோக்கும் இடத்தில், இந்த ககோளம் நாம் இருக்கும் இடத்தில் தெற்குவடக்காய்ச் சாய்ந்துள்ள ஒரு இருசுக்கோட்டை மத்தியாகக்கொண்டு சுற்றிவருவதாகவும் காணப்படும். இந்த இருசுக்கோடு ஆகாயத்தில் படும் இடத்திற்கு அருகேதான் வடபுறத்தில் துருவநக்ஷத்திரம் இருப்பது. இதனால்தான் இந்தத் துருவநக்ஷத்திரம் இடம் மாறாது இருந்த விடத்திலேயே எப்பொழுதும் இருக்கும். இந்த இருசுக்கோட்டிற்குக் குறுக்கே நேர்மட்டமாக 15 துண்டாக இந்த ஆகாயகோளம் பகுக்கப்பட்டிருப்பதாக எண்ணிக்கொள்ளவேண்டும். நக்ஷத்திராதிக்கூட்டங்களடங்கிய ஒவ்வொரு கதுப்பிற்கும் பொதுவாக லோகம் என்று பெயர். ஆனால் துருவநக்ஷத்திரத்தின் பக்கமாக உள்ளவைகளுக்கு லோகம் என்றும் எதிர்ப்புறமுள்ளவைகளுக்கு தலம் என்றும்பெயர். லோகங்கள் முறையே ஏழு. அவையாவன:- நரகலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், ஜநேலோகம், தபோலோகம், ஸத்யலோகம் என்பவைகளே. தலங்களும் ஏழு. அவையாவன:—அதல, விதல, ஸுதல ரஸாதல, மஹாதல, தலாதல, பாதல என்பவைகளே. பூலோகமாகிய நமது லோகம், இவைகளுக்கு இடையில் மத்தியில் இருப்பது. இவ்வாறு பதினைந்தாக ஏற்பட்டுள்ள கதுப்புக்களில், நரகலோகம் பூமியைச் சுற்றி இருப்பதாலும், இதன் பாகங்கள் மற்றையக் கதுப்புக்களிலும்

சிதறி இருப்பதாலும், இதைப் பெரும்பாலும் பூலோகத்திலும், மற்றையவைகளிலும் அடக்கியே கூறப்படும். இதுபற்றியேதான், பதினன்கு லோகம் என்றவழக்கமும், மேலேழ் லோகம், கீழேழ் லோகம் என்ற வழக்கமும் நம்முள் ஸாதாரணமாகக் காணப்படுகிறது. இவ்வுலகம் ஒன்றுக்குத்தான் கர்ம பூமி என்ற பெயர் பொதுவாகக் கொடுக்கப்பட்டிருப்பினும், இதிற் சிற்சில பாகங்களே வைதிக கர்மாக்களுக்குத் தருந்தவை. மற்றைய உலகங்களெல்லாம் போக பூமிகளே; அதாவது பெரும்பாலும் பூலோக கர்மாக்களின் நீண்டபலன்களை அனுபவிப்பதற்கும், சிறு பான்மை மேல் லோக நிலைக்குப் போக முயல்வதற்குமே தருந்தவை. இதுபற்றியேதான் இவ்வுலகமொழிந்த மற்றைய உலகங்களில் பிறவியிலேயே அதிகாரம் செலுத்த அமைந்துள்ள தேவதைகள் இவ்வுலகத்தில் புண்ய கர்மாக்கள் செய்து தகுதியான நிலையை அடைந்தவர்களேயாக உள்ளார். இந்த ஆதிகாரிக தேவர்களும், அவர்கள் கீழ் அவர்கள் உலகில் குடியேறி, முன் இவ்வுலகப் பிறப்பில் செய்த கர்மாக்களின் பலன்களை அனுபவிக்க வருபவரும், ஒரே பாஷையான ஸம்ஸ்கிருதம் என்ற தேவபாஷையைப் பேசுபவரும், ஒரேஜாதியான ப்ராஹ்மண ஜாதியைச் சேர்ந்தவரும் தாம். இவ்வுலகில்தான் ஸம்ஸ்கிருதத்திலிருந்து வெளிப்பட்டதான பலபாஷைகளைப் பேசும் நால்வகை வருணத்தாரும், அதற்குப் புறம்பான பலஜாதியாரும் உண்டு. ஆகவே ப்ராஹ்மணராகித்தான் மோக்ஷம் அனுகப்படவேண்டும் என்று கூறும் வேதத்திற்கு, இவ்வுலகில் ப்ராஹ்மணராகப் பிறந்தோ அல்லது புண்ய விசேஷத்தால் லோகாந்தரத்தில் புண்யலோகவாஸி யாகியோதான் மோக்ஷஸோபானப் பழக்கம் ஏற்படவேண்டும் என்பதுதான் பொருள்.

இங்கு எடுத்துக்காட்டப்பட்ட பதினன்கு லோகங்களையும் சாஸ்திரங்களில் பலவிதமாகக் குறுக்கிக் கூறுவதுண்டு. முதலில் கீழ் ஏழு தலங்களையும்விட்டு அவைகளை மேல் ஏழு லோகங்களுள் அடக்கி அவைகளை மாத்திரம் கூறுவது உண்டு. இவைகளுள்ளும் முதல் மூன்று லோகங்களான பூ, புவ, ஸுவர் லோகங்களுள் மற்றைய நான்கையும் அடக்கிக் கூறுவதும் உண்டு. கீழ் உள்ள ஏழுதலங்களில் உலகங்கள் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்துபவராயும், மஹா புண்ய புருஷர்களாயும் உள்ள சிரேஷ்டர்கள் இருப்பதாலும், மேல்நான்கு லோகங்களுள் மஹா புண்ய புருஷர்களே சென்று வாழக்கூடிய தாதலாலும், இவைகளில் ஸாதாரண உலகத்தவர் போகப் பெரும்பாலும் இடம் இல்லாததாலும், இவ்வுலகத்தவர் மேன்மை அடைய வழி காட்ட வந்த வேதம் இவர்கள் எளிதில் போய்ச் சிறப்படையக்கூடிய மூன்று லோகங்களை மாத்திரம் எடுத்துக் காட்டி மற்றவைகளை அவைகளுள் உபலக்ஷணமாக அடக்கிக் கூறும்.

இவ்வுலகங்களில் எல்லாம் நடைபெறக் கூடிய வைதிக கர்மாக்கள் ஐந்துவிதமாக இருக்கும். அவையாவன:-(1)மனுஷ்ய கர்மாக்களாகிய பிறரது நன்மையைக் கருதியும், மற்றைய ப்ராணிகளின் நன்மையைக் கருதியும் செய்யப்படுவனவான மனுஷ்யபூத கர்மாக்கள்; (2) பிதிர்கர்மாக்களாகிய ஒவ்வொருவரது மூதாதையர் முதலியோரைக்குறித்துச்செய்யப்படுபவை;(3)தேவகர்மாக்களாகிய யாகாதி தேவதைகளைக்குறித்துசெய்யப்படும் அக்னி கார்யங்கள்; (4) ருஷி கர்மாக்களாகிய வேதா

த்யயனம், ஜபம், ஆசார்யாராதனை முதலிய வைகள்;(5)ஈச்வரகர்மாக்களாகிய பக்தி,பூஜை ஸததியா முதலிய பொதுக் கடவுள், வைதிக வழிபாடுகள் ஆகிய இவைகளே. இவைகளுள் பூத கர்மாக்களைத் தனியாகப் பிரித்து ஈச்வரகர்மாக்களாகியவைகளைவிட்டு,வைதிக கர்மாக்கள் சில சாஸ்திரங்களில் ஐந்தெனப்படும். அவைகளின்படி இந்த ஐந்து கர்மாக்களும் சென்று, அடைபவர் மூலமாக ஈச்வரனையே முடிவில்போய்நாடுவன என்ற வைதிக உட்கருத்தை உணர்ந்து செய்வதாலேயே ஈசவர கர்மாக்களாகும் என்பதே முடிவான கொள்கை. ஆகவே, எப்படியும் முடிவில் ஈச்வரனையே நோக்கமாக உடைய கர்மாக்களைக்காட்டி மானிடர்களை லோகாந்தரத்தின் வழி மோக்ஷமடையச் செய்வதற்கே ஏற்பட்டது வேதம் என்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபணை இல்லை. இவ்வுலகங்களில் எல்லாம், வாழ்க்கையும் கர்மாக்களும் இங்குள்ளது போலவே விஷய ஸம்பந்தமாயும் வைதிகமாயும் இருப்பினும், மேல் போகப்போக லோகாந்தரங்களில் கர்மாக்களின் குறைவும், அனுபவகாலம் தன்மை இவைகளின் ஏற்றமும்,மேல் மோக்ஷம் நோக்கி முயல வரவரச் சிறந்த ஆற்றலும், அவகாசமும் காணப்படும். இவ்வுலகங்களில் ஆபத்துக்கள் அஸுராதிகளிடமிருந்து உண்டு; ஆயினும் அவ்வுலகைவிட அவைகள் சிறந்தவைகளே.

இனிமேல் லோகாந்தரங்களில் உள்ள விஷயங்களைச் சிறப்பாக எடுத்து ஆராயப் புகுவோம். வ்யாஸர் தாம் எழுதிய யோகதர்சன பாஷ்யத்தில் 3-ம்பாதம், 26-ம் ஸூத்திரத்தில் எழுதியபடி (1) பூலோகம்—மத்ய பாகம் நாமிருக்கும் இடம்; இதற்கு ஜம்பூத்விபம் என்றும் பெயர். இது, ரமணகம், ஹிரண்மயம், உத்தரகுரு,ஹரி,கிம்புருஷம், பாரத, பத்திராசல, கேதுமாக,இளா என்ற வர்ஷங்கள் என்று கூறப்படும் 9 கண்டங்களை உடையது. இங்குள்ள வைதிகர்களானவர்களுக்கு முன்னர்கூறிய 5 கர்மாக்களும் உண்டு. இங்கு பலஜாதிகள் உண்டு; பலவித ஆதிகாரிகர்கள் உண்டு; பல பாஷைகள் உண்டு;ஸுகதுக்கம் மாறிமாறிவரும்.ஆயுஸ் 100-வருஷந்தான். இதிலிருந்து மேலும் உயரலாம், கீழும் தாழலாம்.

(2) நரகங்கள்.—இவைகள் பூமிமுதல் ஸ்வர்க்க லோகத்துள்ளடங்கியவை; பெரும்பாலும் பூமி அருகிலேயே இருப்பவை. இவைகள், மஹாகாலம், அம்பரீஷம், ரௌரவம், காலஸூத்ரம், அந்தம், தாமிஸ்ரம் என்ற ஆறே. இவைகளில் முறையே ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இருள் இவைகள் ஏற்றமாக இருக்கும். யமதர்மன் ராஜா; அவன் தூதர்கள் ஆதிகாரிகர்கள்; வாயவிய சரீரத்துடன்வரும் இவ்வுலகவாஸிகள் தான் பிரஜைகள். இங்கு ஓயாத்துக்கம் தான்: ஒரு வைதிககர்மாவுக்கும் இடமிராது இடை இடையே ஸந்ததிகளது தர்ப்பண ச்ராத்தாதிகளால் துக்க விடுதலை இருக்கும். ஸ்வர்க்கத்தில்கூட சில நரகங்கள் உண்டு. அவை வரம்புமீறிய ஸந்யாஸிகளுக்கு மாத்திரந்தான்; இந்திரனால் ஆளப்பட்டவை.

(2) புவர் லோகம்.—இது பிதிர்க்கள், கிம்புருஷாதிகள் உலாவும் த்ருவமண்டலம் வரையில் உள்ள லோகம். இங்கு ஜலீய சரீரம் பெற்ற புண்யவான்கள்,சிலமத்யமவாயவிய சரீரத்துடனிருக்கும் பூதப்ரேத பிசாச புண்யவான்களும் இருக்குமிடம். இங்கு முக்கியமாக சந்திரமண்டலத்தில் நான்கு வர்ணத்தாருடைய பிதிர்தேவதைகள் இருக்கின்றனர். இவர்கள் பெயர்கள் மனுதர்ம

சாஸ்திரத்தில் நன்ருகக் கூறப்பட்டுள்ளது. இங்கு குடிஏறும் புண்ய ஜீவர்களுக்குத்தேவ ருஷி ஈச்வர கர்மா மூன்றுதான்; இங்குள்ள ஆதிகாரிகர்களுக்கு ஈச்வர ருஷிகர்மாக்கள் இரண்டுதான்.

(3) ஸுவர் லோகம்.—இதுதான் ஸ்வர்க்கம் என்பது. இதற்கு ராஜன் இந்திரன். இவன் தூதாதிகள் அதிகாரிகள். இவர்களுக்குப் பிதிர், ருஷி, ஈச்வர கர்மாக்கள் உண்டு. இப்படியேதான் இங்கு வந்து ஆக்நேய சரீரத்துடன் குடி ஏறுபவர்களுக்கும். இங்குள்ளவர்களுக்கு விஷய ஆசை அதிகம். ஸுகங்களுக்கு இங்கு அலையவேண்டியதில்லை. எல்லாம் தயாராக இருக்கும். காமதேனு உணவு வேற்றுமைகளையும், கற்பகவிருக்ஷம் துணி வேற்றுமைகளையும், சிந்தாமணி நகைவேற்றுமைகளையும், விமானதிகள் வாகன வேற்றுமைகளையும், தேவர்கள் நினைத்தவாறு உடனே கொடுக்கும். இவர்களுக்கு இருக்கும் வரையில் வயது 30 ஆகவேதானிருக்கும். தேவர்கள் இவைகளை அனுபவித்துக்கொண்டு மேலே போகவிரும்பினல், தமது கர்மாக்களைவிடாது செய்துவரவேண்டியது. வெறும் அனுபவமாத்திரமிருந்தால் முடிவில் இங்குவந்து பிறக்கவேண்டியதுதான்.

(4) ருஷிலோகங்கள்.—இவை மஹர் (பிருஹஸ்பதி முதலிய ப்ரஜாபதி விசேஷர்கள் இருப்பது), ஜனே (நாரதர் முதலிய தேவ ருஷிகளிருப்பது), தபோ (வஸிஷ்ட ஸநகாதி தவ ச்ரேஷ்டர்களிருப்பது) லோகங்களென மூன்று பாகங்களை உடையவை. இங்கு வந்து குடியேறுபவர்களுக்குப் பிதிர் ஈச்வர கர்மாக்களிரண்டுதான் உண்டு. இங்குள்ள ஆதிகாரிகர்களுக்கு ஈச்வரகர்மம் ஒன்றுதான். இவைகளில் முறையே 5, 4, 3 வித தேவர்கள் உண்டு. ஒருவரைவிட ஒருவருக்கு ஆயுஸ்ஸும் மனதை அடக்கும் ஆற்றலும் தபோபலமும் அதிகம். இவர்கள் எங்கும் உலாவும் வல்லமை உடையவர்கள்.

(5) ப்ரஹ்ம லோகம்.—இதற்கு ராஜா ப்ரஹ்மா. எல்லோரும் ப்ரஹ்மவிசார அதிகாரிகளே. ஈச்வரகர்மா ஒன்று மாத்திரம் உடையவர்களே. இங்குள்ளவர்கள் தமது சித்த ஏகாக்ரப்படும் ஆற்றலுக்கேற்ப 4 வகுப்பாக இருப்பார். இங்கு வரும் ஜீவர்களில், சில புண்யவான்கள் இந்த உலகம் முடிந்து ப்ரஹ்மா முக்தியடையுங்கால் மறுபடி திரும்பாத மோக்ஷத்தைக் கூடவே அடைந்துவிடுவர். மிகுந்தவர்கள் பொதுவாக ராகிஸத்துக்கள் (தமது ஈச்வர த்யானத்திற்கு விஷயானுகூலங்களை விரும்பி நிற்கும் உபாஸகர்கள்) ஆகவே இருப்பதால் இவ்வுலகில் மறுபடிவந்து வைதிக ஸ்ரீமான்கள் குலத்தில் பிறக்கத் தயாராவர். இந்த ப்ரஹ்மலோகம் உள்பட எல்லா லோகங்களுக்கும் போக்குவரவுண்டு. இதற்கு மேற்பட்ட மோக்ஷம் எப்பொழுதும் மாருநிலையுள்ளது. இதையேதான் பகவான் கீதை VIII-ம் அத்யாயம் 16-ம் ச்லோகத்தில்

> முண்டகம் வாழ்துய உலகம் முதலாகும்
> அண்ட மெலாம் மீள்வனவே ஆருலகில்-கண்டாய்
> எனையடைந்தார்க் கில்லையே எந்நாளும் மீண்டும்
> துனிசெய்பிறப் பென்னத் துனி.

என்ருர். இங்குகூறப்பட்ட மனிதர் ஸத்கர்மாக்களால் அடையக்கூடிய லோகாந்தரங்களில் நரகம் தவிர மற்றையவிடங்களில் எல்லாம் கர்மாக்கள் செய்யப்படின், அந்த உலக வாழ்க்கை முடிவில் போகப்படும் லோகாந்தரத்தில்தான் பலிக்கும். இதனுலும் இவ்வுலகவாழ்க்கை நூறு மனுஷ்ய வருஷத்திற்குள்ளே அகப்பட்டிருப்பதாலும், இங்குசெய்யப்படும் கர்மாதான் எளிதில் சீக்கிரம்

பலிக்கும். சீக்கிரம் பலன் தொடங்கி விடுவதாலும், ஸுகதுக்க மாற்றம் எளிதில் ஏற்படுவதாலும், இங்கு விஷய வைராக்கியம் உண்டாவது எளிது. இவ்வுலகைக் கர்மபூமி என்று கூறுவதற்கு இதுவும் ஒரு காரணம். பகவான் கீதையில் IV-ம் அத்யாயம், 12-ம் ச்லோகத்தில் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்.

கன்மங்க ளின்பயனைக் காதலிப்பார் ஞாலமிசை
பன்முகமும்செய்வர்பரிச் துசுரர்க்-கென்னேயெனில்
மானிடர்வாழ் வையகத்தில வாய்த்திடுமே கன்மத்
தனபயன் ஆசென் றறி. [தால்

இப்படி எல்லாம் லோகாந்தர விஷயத்தையும் மரண, உத்க்ராந்திகளது தன்மைகளையும், வைதிக கர்ம விசேஷத்தையும் உணர்ந்து நடந்துகொண்டுவருபவர் எல்லோருக்கும் வரவர மரணபயம் குறைந்துபோய் அது வெறும் உடைமாற்றம் என்றே தோற்றும். கீதை II-ம் அத்யாயம் 13-ம், 22-ம் ச்லோகங்களில் இத்தோற்ற விஷயம் பின்வருமாறு காட்டப்பட்டிருக்கிறது.

செப்பிடுமிம் மெய்யதனிற் றேகிக்குச் சேருமிள
மைப்பருவம்யௌவனமும்வார்த்திகமும்எப்பரிசோ
அப்பரிசே வேறுடலம் ஆருதலும் இத்திறத்தில்
வைப்பதில்லை ஞானி மயல்.

உடுத்துக் கிழிந்ததுநீத் தொண்டுகில்வே றென்றை
எடுத்தொருவன் கட்டுதலை ஏய்ப்ப—விடுத்துயிரும்
முன்னிருந்த மூதுடலை மோதமொடு சென்றுபுகும்
பின்னிருந்த வேறுடலுள் மிக்கு.

இங்கு காட்டப்பட்டுள்ள லோகாந்தர விஷயத்தைப் பதஞ்ஜலி யோகதர்சனம் III-வதான விபூதிபாதம் 26-ம் ஸூத்ரமாகிய, 'ஸூர்ய ஸம்யத்தால் புவன ஞானம்' என்பதற்கு வ்யாஸ மஹருஷி எழுதியுள்ள வ்யாக்யானத்திலும் புராண இதிஹாஸங்களில் விஸ்தாரமாகக் கண்டறியலாம்.

இந்த லோகாந்தரங்களிலிருந்து இவ்வுலகில் ஜீவர்கள் மறுபிறப்படையும் விஷயங்களை மேல் எடுத்து விஸ்தரிப்போம்.

## சண்டேசுர நாயனர்

## CHANDESWARA NAYANAR

அன்பெனு மாதரவுகொண்டு, வன்பிறவியெனுமாமாயை யறுகா வண்ணம் தற்காத்துப் பொற்பாதம் சேருதல் மானிடர் கடன். அங்ஙன மல்லரெல்லாம், அல்லல் நீக்க அரிய புல்லறிவாளர். அவர் பிறந்தும் பிறவாதவர். 'அறிவை நோக்கிடலதற்குத் தாய் தந்தை யிலை யிவ்வுடலதனை நோக்கி லிறையுகீருபாதான காரணமன் றிருமாயையினிலுண்டாகுங் குறியிதுவிங்காயின் மண்ணிலென்னைப்பெறுதவரிலை' என்ற குமாரதேவர் குருமொழிக்கிணங்க, சிவனடி சேருதற்கிடையூறாய்த் தோன்றிய தன் பிதாவையே வெட்டி, அடியார்க்குத் தலைவராய சண்டேசுவர நாயனர் சரித்திரமாகிய இனிய தேனை நமது நண்பர்கள் குடித்துக் களிக்குமாறு இங்கு எடுத்துரைப்போம். இப்புனிதன் பிர்ம்ம குலத்திலே உதித்தவர்; சோழ மண்டலத்திலே திருச்சேய்ஞலூர் என்ற திருநாட்டிலே எச்சதத்தன் என்னும் அந்தணனுக்கு மகனாய் வாய்த்தவர். அணங்கரசியாகிய பவித்தாரை வயிற்றில் அவதரித்தவர். கோத்திரங்களுள் சிறந்ததாகிய காசிப கோத்திரர். சேயின் பெயர் விசாரசருமர் நாயனர், கிரமப்படி ஐந்தாமாண்டில், வித்தியாரம்பம் பெற்று வேதங்களையும், வேதாங்கங்களையும், சைவாகமங்களையும், பூர்வ ஜன்மவாஸனை சம்பந்தமாய்ச் சுவபாவமாகவே நன்குணரும் சக்தி பெற்றார். த்விஜகுழியாக முறையே எழாமாண்டில் உபநயனஞ் செய்யப்பெற்று ஆத்மாசாரமாகிய பிர்ம்மோபதேசம் செய்விக்கப் பெற்று, வேதாத்யயன ஆரம்பம் செய்தார். வேதாத்யானம் கற்பிக்க ஏற்பட்ட

ஆசாரியர்கள், தாங்கள் கற்றுக்கொடுக்கு முன் விசாரசருமருக்கு ஏற்பட்ட புத்தியை வியந்தார். அருள், வணக்க முதலிய குணங்கள் இயற்கையாயமைந்த பாலரான விசாரசருமர், அனாதிபோதம், அலுப்த சக்தி முதலிய எண் சித்திகளுடைய ஈசன் எங்குமுளனென்றும், அவனன்றி ஓரணுவு மசையாதென்றும், அவனே நம் முன்னிருப்பதால்தான் அருட்பிரவாக வெள்ளம் ஓடுகிறதென்றும், அவனன்றி நாம் இல்லையென்றும், கனியின் சுவையே அவனென்றும், என் நுணத்தனு மீசனுவனாலேயே மாயையென்ற பெண்ணானவள் வெட்கமடைகிறாளென்றும், உளம் பூத்துக் காய்த்துக் கனிவதும் அவனாலேயென்றும் அவனே வேதங்கள் சொல்லாமற் சொல்லி, காணமடைகின்ற மெய்ப்பொருளென்றும், அவனே பரமபிதாவென்றும், துணிவுற்றுத்தம் மனத்தை வேறிடம் புகவிடாமல் அவனடி சேராநின்றார். ‘வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு யாண்டு மிடும்பை யில" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தேன்மொழிக்கிசைய, புலால் யாக்கையை நீத்து, சிவனடிசேர உன்னியவர். அவருக்கு ஒரு உறுதியுண்டு.

"என்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தா லுயிர்விடுவேன் கணந்தரியே னுன்னை
யிதுநீ, யென்னைமறந் திடுவாயோ மறந்திடுவா
யெனில்யா னென்னசெய்வே னெங்குறுவே
னெவர்க்குரைப்பே னெந்தா, யன்னையினுந்
தயவுடையாய் நீ மறந்தா யெனினு மகில
மெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே,
யின்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன்,
மறவேலிதுதருண மருட்சோதி யெனக்கு
விரைந் தருளே."

என்றார் திருவருட் பிரகாச வள்ளலார். ஆன்மாக்களாகிய நாமெல்லாம் அநாதிமல பத்தர் என்பதும், நமது அம்மல சத்தியைக் கெடுத்து நித்தியமாகிய பேரின்பத்தை அளிப்பவன் ஒப்பற்ற விசனேயென்றும், அறிந்தவர் விசாரசருமர்.

ஒருநாள் அவர் தம்மோடு அத்தியயனஞ் செய்யும் பிள்ளைகளோடு செல்லுகையில் பசுநிரைகள் எதிர்ப்பட்டன. அவைகளில் ஓரீற்றுப்பசு, அவைகளை மேய்ப்பவனாகிய இடையனைக் குத்தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கஞ்சாதவனாய் அக்கோவைத்தடியால் புடைத்தான். மெய்யறிவுடையவும், பச்சாத்தாப முடையவருமாகிய அவ்விசாரசருமர் அது கண்டு, துயரமிகுந்து சீற்றமேற் கொண்டு, பதைபதைத்து அகிருத்தியனை அருகி, ‘அடா, என்ன பாபஞ் செய்தாய். கோக்கள் தெய்வலோகத்துக் காமதேனு வல்லவா? அவைகள் தரும் பால் ஈசனுக்கு அபிஷேகத் திருமஞ்சனமாயிற்றே! அவைகளின் ஒவ்வொரு அணுப்பிரமாணமும் முப்பத்து முக்கோடி தேவர்களுறையும் இடமல்லவா? அவைதரும் பஞ்சகவ்வியங்கள் சிவபிரானுக்கு அபிஷேகத் திரவியம்; சிவசின்னமாகிய திருநீறு அவைகள் போடும் சாணம். இவைகளெல்லாம் அறியாது நீ கோக்கள் மேய்க்க அருகனல்ல' என்று உறுமி அப்பசுக்களைத் தாமே மேய்க்கத் தொடங்கினர். விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராம்மணர்களின் சம்மதி பெற்றுத் தினந்தோறும் தம்மூர் அருகாமையில் ஓடுகின்ற மண்ணியாற்றங்கரையில் இருக்கின்ற காடுகளிலும், வயலோரங்களிலும், புல் நிறைந்திருக்கும் தரைகளிலும் அவைகள் திருப்தியடையும்படி மேயவிட்டு, வெயில்கூடப் படாமல் காத்துக்கொண்டிருந்து, சிவந்த கிரணங்களையுடைய சூரியன் தன் விடடைவதற்கு முன், பசுக்களைத் தத்தம் விட்டில் ஒப்புவித்துவந்தனர்.

இப்படி நடாத்தி வருங்காலையில், நதியில் தாகம் திருமாறுத்தண்ணீரருந்தும்பொழுது மச்சங்கள் முலைக் காம்பினருகில் முட்ட, தம் சேய்களென்று விட்டளவும் பால்சொரிந்து, அவ்வளவு செழிப்பாயும், குறைவில்லாமல் போஜன பானங்களுக்கும், ஹோமாதி யஞ்யங்களுக்கும் அவைபால் அளித்தன. விசாரசருமர் மேய்க்கத் தொடங்கிய பின் அமிதமாய் ஈன்ற பாலைக்குறித்துச் சந்தோஷமடைந்தனர் அந்தணர். பசுக்களோ, விசாரசருமர் தம்மேல் வைத்த கருணையால், தம் கன்றுகளைப் பிரிந்தாலும், அப்பாலனைப் பிரிந்து சற்று மாற்றாதவாயின. அவைகள், இவரைக்கண்டு கனைத்து ஆரவாரித்துத்

தாயைப்பிரிந்து தவித்த சேயைப்போல் நாடி இவரண்டை நிற்பவாயின. இப்படியிருக்க, அவைகள் கொடுக்கும் பால் சிவனது திருமஞ்சனத்துக் கேற்றது வென்று கருத்தினுன்னிச் சிவார்ச்சனையிடத்தே அவாவுறுவார் விசாரசருமர்.

அடியார்கள் கருத்துக்கிசையக் காத்துக்கொண்டிருக்கும் ஈசன் அருளால் விசாரசருமர் உளத்தில் ஒரு யோசனை உதித்தவுடனே மண்ணியாற்றின் கரையிலிருக்கின்ற ஒரு மணற்றிட்டிலே திருவாத்தி மரத்தின் கீழே ஒரு மணற் சிவலிங்கங்குவித்துத் திருக்கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்து, திருவாத்திப்பூ முதலிய நறு மலர்களும் பச்சிலைகளும் பறித்துத் திருப்பூங்கூடைகளிற் கொண்டுவந்து வைத்துவிட்டுப் புதிய குடங்களைத் தேடி வாங்கிக்கொண்டு வந்து, கறவைப் பசுக்களொவ்வொன்றிடத்திலும் சென்று முலையைத் தீண்டினர். அவைகள் கனைத்துப் பால் பொழிந்தன. பாலினலே நிறைவுற்ற குடங்களைத் திருவாலயத்திலிட்டு அடியு முடியும் அறிய வொண்ணுத பரமசிவனைப் புஷ்பங்களால் அருச்சித்து, வேத கோஷங்களெனத் திருவாக்கால் அன்பு மொழிகள் கூறி, ஆனந்தபாஷ்பம் சொரிய கண்களில் நீர் பெருகி நின்றார்.

திருமஞ்சனமாய்ப் பாலை அபிஷேகம் செய்வர். அய்யனே, எனக்குக் கிடைக்காத பொருளை மனதினலே இடுவேன் ஏற்றுக்கொள்ளென்பர்.

இவ்வாறு நடந்து வரும் தினந்தோறும், பசுக்கள் குறையாமல் யஞ்ஞங்களுக்கும் போஜனங்களுக்கும் முன்னினும் பதின் மடங்கு பால் ஈன்றன.

பார்ப்பவர்களுக்கு விளையாட்டாய்த் தோன்றுகின்ற சிவார்ச்சனையைச் செய்துவரும்பொழுது, ஒருவன் அதன் உண்மையைத் தெரியாதவனுகி அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அதைக் குற்றமாகக்கொண்டு சபையாருக்குத் தெரிவிக்க, அவர்கள் அச்சிறுவனுடைய தாதையாகிய எச்சதத்தனுக்கு அறிவிக்க, தன் தனயன் இயற்றிய பிசகைப் பொறுக்க முடியாதவனுகி இரி அவ்வாறு நடவாதபடி காப்பதாக வாக்குக் கொடுத்தான்.

தான் கண்டித்தும் விசாரசருமர் இணங்காதது கண்டு, இவன் யாது செய்கிறுனென நோக்க, எச்சதத்தன் ஒரு நாள் விசாரசருமர் அறியாவண்ணம், பசுநிரை மேய்க்குமிடம் சென்றுன். வழக்கம்போல் விசாரசருமரோ மணலினல் நிர்மாணித்த சிவலிங்கத்தருகே பசுக்களைக் கூவி, முலைக்காம்பைத் தீண்டினர். தீண்டியவுடன், அபிஷேகப் பாலைக் குடத்துள் நிரப்பினர். இதுகண்டு வெகுண்ட எச்சதத்தன், குடத்தைத் தன் காலாலுதைத்தான். சிவலிங்கத்தினபிஷேகத்துக்கு வைத்திருந்த க்ஷீரத்தை உதைத்த வேதனை பொறுக்காமல், அவ்வாறு தவறுசெய்த தன் தந்தையின் காலை ஒடிக்க அவ்விடம் ஒரு கோலெடுக்க, அது மழுவாக, அம்மழுக்கொண்டு, ஊன் சம்பந்தமாய்த் தந்தையான எச்சதத்தன் காலை வெட்டியெறிந்தார். வெட்டவும், பரமசிவன் ப்ரசன்னமாகிக் 'குழந்தாய்! என்னிடம் நீ வைத்த பக்தியால் நின் தந்தையை வெட்டினுய்;இனி என்னையே தந்தையாகக்கொண்டு என் பக்கிலிரு' என வாக்கருளி மறைந்தார்.

சிவனடி சேருதற்கு இடையூறு யாது நேர்ந்தாலும், அவற்றை ஞானமென்னும் மழுக்கொண்டு சேதனஞ்செய்து, சம்சாரக்கடலைத் தாண்டுதலே பேரின்பம்.

"மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதையை, மழுவினலெறிந்த, அம்மையானடிச் சண்டிப் பெருமானுக்கடியேன்"

டி. எஸ். வேங்கடராமய்யர்.

---

பக்தியின் பலம்.—வைராக்யமும் உண்மைப் பொலிவுமுள்ள பக்தியினல் செய்யக் கூடியதைப் பற்றி விஸ்தரிக்கவேண்டியதில்லை. அநுமார் கடலைத் தாவியததனல்தான். கண்ணப்பன் கண்ணளித்துக் கடவுளானது மதனல்தான். உடலைப் பற்றிய ஆசையைக்கடந்து, தலைவனுடைய நிலையையுணர்ந்து, அதில் மயங்கி யீடுபடுதலே அதன் தன்மை. அதை வழிபெற்று வாழ்வதே பிறவியின் பயன்.

# அம்பலக்காரன்

**AMBALAKKARAN**

1891-ம் வருஷத்திய ஜனசங்கியை ரிபோர்ட்டில் மிஸ்டர் (இப்பொழுது ஆனரபிள் ஸர்) எச். யே. ஸ்டூவர்ட் பின் வருமாறு எழுதுகிறார்:— "அம்பலக்காரன் என்பது, கள்ளர்களும், மறவர்களும் வசிக்கும் ஜில்லாக்களில் உள்ள கிராமங்களின் தலைமை உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்கப்படும் பெயரோ, அல்லது சாதாரணமாய்க் கள்ளர்களுக் களிக்கப்படும் நாமமோ வென திட்டமாய்த் தெரியவில்லை. அம்பலக்கார ஜாதியாருக்கும், கள்ளருக்கும் உள்ள நுட்பமான சம்பந்தம் என்னவென அறியவுங்கூடவில்லை. ஆனால், என் கைவசம் வந்திருக்கும் சில விவரங்களிலிருந்து, அம்பலக்காரர்கள், கிராமத்தலையாரிகள் வகுப்பிற்சேர்த்துக் கணக்கிடப்பட்ட முத்திரியர்களுடன் நெருங்கின சம்பந்தம் உடையவராய் இருக்கலாமென ஊகிக்கிறேன் ...... அம்பலக்கார ஜாதியாருள் ருதுவானபிறகே தான் சாதாரணமாய் விவாகம் நடத்துகிறார்கள். கைம்பெண் விவாக வழக்கமுமுண்டு. ஆனால், கள்ளன், மறவன் முதலியோரிடத்து சர்வசுலபமாய் நடைபெற்று வரும் விவாக விமோசனமானது, அம்பலக்காரர்களிடத்து அவ்வளவு சுலபமாய் நடை பெறுவதில்லை. இறந்தோரைத் தகனஞ் செய்வதுமுண்டு; புதைப்பதுமுண்டு. அவர்கள் மது மாம்சாதிகள் புசிப்பார்கள். அவர்களுடைய வழக்கமான பட்டப்பெயர் சேர்வைகாரன் என்பது. ஆனால் முத்திரியன், அம்பலக்காரன், மழவராயன், முதராசன், வன்னியன் முதலிய நாமங்களையும் அவர்கள் தரிப்பார்கள். ஆனால் முத்திரிய ஜாதியாரின் பட்டப்பெயரோ நாயக்கன் என்பதாம்."

1901-ம் வருஷத்திய கானிஷ்மாரிக் கணக்கில் அம்பலக்காரர்களைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிக்கப் பட்டிருக்கிறது:— "அம்பலக்காரர் பயிர்த்தொழிலும், கிராமப் பாதுகாப்பும் செய்துவரும் ஒரு தமிழ்நாட்டு ஜாதியார். சமீபகாலம் வரை அம்பலக்காரன் என்னும் பதமானது கள்ளர்களின் பட்டப்பெயரெனவே கருதப்பட்டுவந்தது. ஆனால் நிரவிசாரிக்குங்கால், முக்கியமாய் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் வசிக்கும் ஒருவகை ஜாதியாரின் பெயர் என்று அது தெரிகிறது. முசிரி தாலூக்காவில் ஒரு கிராமத்தில் வசித்துவந்த சில அம்பலக்காரர்களும், முத்திரியர்களும் சேர்ந்து, ஜனத்தொகைக் கணக்கில், தங்களைக் கள்ளர்வகுப்பாருடன் சேர்க்கக்கூடாதென்று ராஜாங்கத்தாருக்கு மனுப்பண்ணிக்கொண்டார்கள். அப்படியிருந்தும், மதுரைநாட்டுக் கள்ளர்கள் அம்பலக்காரர் வீட்டில் உணவெடார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பலக்காரர்; முத்திரியர், முத்ராசர், ஊராளிகள், வேடர், வலையர், வேட்டுவர் முதலிய இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் சம்பந்த முடையவரென்று தோன்றுகிறது. அவர்கள் எல்லோரும் ஒரே கிளையிலிருந்து உதித்தவரெனக் கூறுவதற்கும் நியாயமிருக்கிறது. அம்பலக்காரர்கள, அறுபத்துமூன்று நாயன்மாரில் ஒருவரும், ஜாதியில் வேடருமான கண்ணப்ப நாயனாரிடமிருந்து உதித்தவரெனக் கூறிக்கொள்கின்றனர். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வலையர்களும், தாங்களும் அவ்விதமே உதித்ததாகச் சொல்லிக்கொள்கின்றனர். அந்த ஜில்லாவிலுள்ளவர் வலையன் என்னும் பதத்துக்குப் பரியாயமாய், அம்பலக்காரன், முத்திரியன் என்னும் பதங்களைப் பிரயோகிக்கின்றனர். சில வலையர்களுங்கூட அம்பலக்காரன் என்னும் பட்டப்பெயரைத் தரிக்கின்றனர். தவிரவும், வலையஜாதியாரின் வாஸஸ்தானத்தைக் குறிக்கும் தேசவிருத்தாந்தத்தினின்றும், எங்கு வலையர்களின் தொகை மிகுதியோ அங்கு அம்பலக்காரர்களின் எண்ணிக்கை குறைச்சலென்றும், எங்கு அம்பலக்காரரின் சங்கியை அதிகமோ அங்கு வலையர்களின் தொகை கொஞ்சமென்றும் தெரிகிறது. ஆகையால் அவ்விருத்தாந்தத்திலிருந்து சில ஜாதியார் மட்டுமே தங்களை அம்பலக்காரர் எனக்கூறிக்கொள்கின்றனர் என்று ஊகிப்பதற்கும் இடம் கொடுக்கிறது. அம்பலக்காரரால் மேல் வகுப்பார் தங்களைப் 'பிள்ளை' என்றும் பாராட்டியழைத்துக் கொள்கின்றனர். நியாய

மாப்ப் பார்க்குமிடத்துப் 'பிள்ளை' என்னும் பட்டம் வேளாளர்க்கே உரித்தானது. அம்பலக்கார ஜாதியாரின் மற்றை வகுப்பினருள் தஞ்சை ஜில்லா வாஸிகள் தாங்கள் மூப்பனென்றும், திருச்சி ஜில்லா வாசிகள் தங்களை அம்பலக்காரனென்றும், முத்திரியனென்றும், சேர்வைகாரனென்றும் இஷ்டம்போல் கூறுகிற்கின்றனர். அம்பலக்கார ஜாதியாரின் பஞ்சாயத்துத் தலைமை உத்தியோகஸ்தனுக்குக் 'காரியக்காரன' என்று பெயர். அவ்வுத்தியோகமும் சில குடும்பங்களில் மட்டுமே தலைமுறை தத்துவமாய் அடையப்பெற்றுவருகிறது. ஒவ்வொரு தலைமைக்காரனுக்கும் ஒரு வேலைக்காரன் உண்டு. அவன் பெயர் 'குடிப்பிள்ளை' என்பர். அவனுடைய அலுவலோ, அவசியமான காலங்களில் பஞ்சாயத்தாரைக்கூப்பிடுவதும், தூது போவதுமாம். இவ்வுத்தியோகத்துக்குச் சம்பளமாக அவன் ஒவ்வொரு அம்பலக்காரக் குடும்பத்தினின்றும் வருஷம் ஒன்றுக்கு காலணுவிதம் பெறுவான். அம்பலக்கார வகுப்பை அநேக பாகங்களாகப் பிரித்திருக்கின்றனர். அவைகளுள் முக்கியமானது நான்காம் அவையாவன:—(1) முத்திரியன் அல்லது முத்ராசன், (2) காவலகாரன், (3) வன்னியன், (4) வலையனுமாம். இவ்வகுப்பாருள் ஒவ்வொருவனும் தன் வகுப்பின் திப் புறம்பில் கொள்வினை கொடுப்பினை செய்யக் கூடாதென்று பஞ்சாயத்தார் திட்டமாய்த் தடுத்திருக்கின்றனர். அதைமீறி எவனாவது புறம்பில் சம்பந்தம் செய்வனேல், அவன் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்படுவான். ஆனால் அவர்களுடைய பழக்கவழக்கங்களோ மேல் வகுப்பாரும் கீழ் வகுப்பாரும் அனுசரித்து வரும் நடவடிக்கைகளின் ஒருவிதக் கலப்பு. அவர்களுள் சிலர் பிராம்மணர்களைப் புரோகிதர்களாகக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் சாவுகாலங்களிலும், சிராத்தகாலங்களிலும் பூணூலைத் தரிக்கின்றனர். ஆனாலும் அவர்கள் ஆடு, பன்றி, கோழி இவற்றின் மாமிசத்தை யுண்கிறார்கள். மதுபானஞ் செய்வதுமுண்டு. விதவைகளையும், விவாக விமோசனம் செய்யப்பட்ட பெண்டிரையும் மறுமணம் புரிந்துகொள்ள அநுமதி கொடுக்கின்றனர்."

முத்திரியன், காவல்காரன், என்னும்பதங்களுக்குத் 'தலையாரி என்று பொருள். வன்னியன் என்பது வேறோர் புறம்பான ஜாதி. ஆனால் அவர்களுள்ளும் சிலர் அம்பலக்காரன் என்னும் பட்டத்தைத் தரிக்கின்றனர். அம்பலக்காரர்களும் செல்வப்பெருக்கினால் தாங்கள் தாய்க்கிளையினின்றும் பிரிந்த வேறு வகுப்பினர் எனக் கூறிக்கொண்ட போதிலும் வெளிப்படைக்கு வலையர்கள் தாம்.

மிஸ்டர் எப். ஆர். ஹெமிங்வே பின் வருமாறு அபிப்பிராயப்படுகிறார்: — இச் சென்னை ராஜதானியில் மற்றப் பிராந்தியங்களைவிட திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலும், புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலுந்தான் அம்பலக்காரன் அல்லது முத்திரியன் இவர்களுடைய தொகை மிகவதிகமாயிருக்கிறது. அவர்கள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு ஜாதியாராய் எண்ணப்பட்டபோதிலும், இந்தத் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஒரேஜாதியாராகவே தோன்றுகின்றனர். மேலும், தங்களையே திருச்சினாப்பள்ளி தாலூகாவில் முத்திரியன் என்றும், மற்றைப் பாகங்களில் அம்பலக்காரனென்றும் சொல்லிக்கொள்கின்றனர். எப்பெயரிட்டழைத்தபோதிலும், அவர்கள் ஆக்ஷேபனை சொல்வதில்லை. தங்களை வலையர் என்று கூறிக்கொண்டபோதிலும் சாதாரண வலையர்களுடன் கொள்வினை, கொடுப்பினை செய்யச் சம்மதியார். தங்களுக்கு வலையர் என்னும் பெயர் உண்டானதற்கு ஆதாரமாக ஓர் உபாக்கியானமும் சொல்லிக்கொள்கின்றனர். அதாவது பரமசிவனுடைய கையாழி தவறிக் கங்கையில் விழ, அதையோர் மீன் விழுங்கிவிட்டதாம். அம்மீனைப் பிடிப்பதற்காகத் தங்கள் முன்னோர்களில் ஒருவர் வலையொன்றைக் கண்டு பிடிக்க, அதுபற்றி அவர் சந்ததியாருக்கு வலையரெனப்பெயர் வந்ததாம். நிற்க, தாங்கள் முன்காலத்தில் சீருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்ததற்கு அறிகுறியாக ஸ்ரீரங்கத்திலுள்ள 'முத்தராசன் கொரடு' என்று கூறப்படும ஆயிரக்கால் மண்டபத்தையும், பழனியிலுள்ள ஒரு பெரிய மண்டபத்தையும் சுட்டிக்காட்டி அவை தங்களுடைய மன்

னர்களாற் கட்டப்பட்டவையென்று கூறிக்கொள்கின்றனர். மேலும், பழனி மண்டபத்துக்கு இந்தச் சாதியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் வருஷம் ஒன்றுக்குக் கால் ரூபாய் விதம் காணிக்கையும் சமர்ப்பித்து வருகின்றனர். முத்திரியர்கள், பரமசிவனுடைய வெயர்வை முத்திலிருந்து தாங்கள் உண்டானபடியால் தங்களுக்கு அப்பெயர் வந்ததாகவும் சொல்லிக்கொள்கின்றனர். அச்சாதியானது, அநேக வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகுப்புக்கும் 'நாடு' என்று பெயர். அவ்வித நாடுகளின் தொகை எவ்வளவென்றும், ஒவ்வொன்றின் பெயர் என்னவென்றும் நன்கு புலப்படவில்லை. அவைகளுட் சிலவற்றின் பெயர், திருச்சிராப்பள்ளி தாலூகாவிலுள்ள எட்டரை, கோப்பு, அடவட்டூர், திராம்பாளையம், விமாநாய்க்கன் பாளையமும், முசிரி தாலூகாவிலுள்ள ஆமூர், சவிண்டிப்பட்டி, கருங்காலியுமாம். இவைகளில் சில நாடுகளில் மட்டுமே கைம்பெண் விவாகம் செய்யச் சம்மதிக்கிறார்கள். அவர்கள் முத்திரியன், அம்பலக்காரன், சேர்வைகாரன், காவல்காரன் முதலிய பட்டங்களைத் தரிக்கின்றனர். அவர்கள் ஜனசாரத்தில் உயர்ந்த வேளாளன், கள்ளன், நட்டமான், ரெட்டி இவர்களுக்குத் தாங்கள் கீழ்ப்பட்டவரென ஒப்புக்கொண்டு, அவர்களிடமிருந்து உணவு முதலியவை பெற்றுக்கொண்டபோதிலும், பள்ளி, ஊராளி, உப்பிலியன், வலையன் இவர்களைக்காட்டிலும் உயர்ந்தவரெனவே கூறுநிற்கின்றனர். அவர்களுடைய தொழில் விவசாயம். ஆனால் சிலர் சில்லரை வியாபாரம் செய்கின்றனர். சிலர் கொத்து வேலை செய்வதுமுண்டு. சிலர் தலையாரி உத்தியோகமுஞ் செய்கின்றனர். மணக்காலங்களிலும், சாவுகாலங்களிலும் அவர் பூணூல் தரிக்கின்றனர். அவர்களுடைய ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் பஞ்சாயத்துகள் உண்டு. பட்டணத்துச் செட்டிகள் என்று சொல்லப்படும் சிலர் அச்சாதியில் சற்று மேம்பட்டவரென்று சொல்லப்படுவதுந்தவிர, நாட்டுத்தலைமைக்காரருடன் உட்கார்ந்துகொண்டு, விபசாரம் முதலிய குற்றங்களை விசாரணை செய்வார்கள்.

## இராஜ்ய பரிபாலனம்
## FORMS OF GOVERNMENT
### சட்ட நிரூபண சபை
### (The Legislative Council)

மேற்கூறியபடி தற்காலத்தில் அநேகமாய் எல்லாத் தேசங்களிலும் பார்லிமெண்டரி ஸிஸ்டம் என்று சொல்லப்படும் பிரதிநிதிச் சபை அரசாட்சியானது நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய அரசாட்சி நடக்கும் தேசங்களில் சட்ட நிரூபண சபை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அப்பிரிவுகளின் அங்கத்தினர்களால் சட்டங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அவ்விதமாய் அரங்கேற்றப்பட்ட தீர்மானங்களை நாம் சட்டங்கள் என்று சொல்லுகிறோம். சபையின் இரு பிரிவுகளை (1) கீழ் அல்லது முதல் அங்கம், (2) இரண்டாவது அல்லது மேல் அங்கம் என்று கூறுவது வழக்கம்.

ஷை சபையை ஏன் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும் என்று கேள்வி கேட்கலாம். அம்மாதிரிப்பிரிவுக்கு முக்கிய காரணமாவது:— காரியங்களை அங்கத்தினர் அவசரப்பட்டுச் செய்யாமல் நிதானமாய் ஆலோசனைசெய்து முடிப்பதற்கே. எப்படி என்றால், ஒரு மசோதா ஓர் அங்கத்தினரால் ஆலோசனைசெய்யப்பட்டு மற்றொரு அங்கத்திற்கு அனுப்பப்படும். மேற்படி அங்கத்தின்மெம்பர்கள் அந்த மசோதாவைப்பற்றி ஆலோசனை செய்து, தங்களுடைய தீர்மானத்தைக் கண்டு, மறுபடியும் முதல் முதல் மசோதாவைச்சோதித்த பிரிவுக்கு அனுப்புவார்கள். இம்மாதிரி மூன்று தடவைஅனுப்பப்பட்டு ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொரு பிரிவும் தனித்தனியே ஆராய்ச்சி செய்யப்பெற்றுக் கடைசியாகத் தங்கள் தீர்மானங்களை வெளியில் எல்லா ஜனங்களுக்கும் தெரியும்படி பத்திரிகைகளிலோ அல்லது சர்க்கார் கெஜட்டுகளிலோ பிரசுரம் செய்வார்கள்.

### அங்கத்தினர்கள்

கீழ் அல்லது முதல் அங்கம்.—இவ்வங்கத்தினர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எவ்வாறு ஜனங்கள் தங்கள்

பிரதிநிதிகளை நியமனம் செய்கிறார்கள் என்பதைப் பின்பு யோசிக்கலாம். அநேகமாய் இராஜாங்கத்தில் பணம் சம்பந்தமான விஷயங்களை இவ்வங்கத்தினர்கள் தான் தீர்மானம் செய்யவேண்டும். இவர்கள் உத்திரவன்றியில் பணம் சம்பந்தமான விஷயம் எவ்விதமாய் இருந்தபோதிலும் சரி, இராஜாங்கத்தார் அவ்விஷயத்தில் பிரவேசிக்க முடியாது. இவ்வங்கத்தின் மெம்பர்கள் சபையிலிருக்கக் காலவரை ஏற்பட்டிருக்கிறது. அந்தந்த நாட்டாரினிஷ்டப்படி ஒரு வருஷம், இரண்டுவருஷம், மூன்று வருஷம்,ஐந்துவருஷம், இவ்வாறாகக் காலவரை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குப்பிறகு ஜனங்கள் மறுபடியும், ஷெ மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இரண்டாவது அல்லது மேல் அங்கம்.—இதில் பரம்பரைப் பிரபுக்களும், அரசனால் நியமனம்செய்யப்பட்ட பிரபுக்களும்,இராஜவம்சத்தைச்சேர்ந்தவர்களும்,ஆகஇவர்களே அங்கத்தினர்களாவார்கள். சிலதேசங்களில் எல்லா அங்கத்தினர்களும் தங்கள் ஆயுள் பரியந்தம் மெம்பர்களாக இருப்பார்கள். சில இராஜ்யங்களில்,பாதி அங்கத்தினர்கள் சில வருஷங்களுக்கு மாத்திரம் நியமனம் செய்யப்படுவதும்,பாக்கிப்பாதிஅங்கத்தினர்கள் முன்சொன்னப் பிரகாரம் ஆயுள்வரை மெம்பர்களாக ஆக்கப்படுவதுமுண்டு. மேலும் இவ்வங்கத்தினர் காரியம் சட்ட ஏற்பாடு செய்வதாக இருந்தபோதிலும், சில தேசங்களில்,இவர்களுக்கு நியாய விசாரணை சம்பந்தமான சில அதிகாரங்களைக் கொடுத்திருப்பதை நாம் பார்க்கலாம். பல மாகாணங்கள் சேர்ந்து நடத்திவரும் அரசாட்சியில் சட்டநிரூபண சபையின் மேலங்கத்தினர்களை அவ்வரசாட்சியி லடங்கிய பலவேறு மாகாண சட்ட நிரூபண சபையார் தேர்ந்தெடுக்கிறார்கள். இதைப்பற்றிப் பின்னால் சேர்ந்தவரசைப்பற்றிச சொல்லும்பொழுது விரிவாகச் சொல்லப்படும்.

### சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவோர்கள் (The Executive)

சட்ட நிரூபண சபையாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரும் பொருட்டு ஒவ்வொரு இராஜ்யத்திலும் சில புத்திமான்களை நியமித்திருக்கிறார்கள்.

ஆனால் எக்ஸக்யூடிவ் (Executive) என்ற பதத்தை ஒரு இராஜ்யத்திலிருக்கும் சட்ட நிரூபண சபையார்கள், நியாய விசாரணை செய்பவர்கள், ஆக இவர்கள் அல்லாத மற்ற எல்லா அதிகாரிகளுக்கும் உபயோகிக்கலாமென்று சிலர் கூறுவர். சட்டங்களைப் பரிபாலனம் செய்பவர்கள் சிலரே யாவர். அவர்களால் நியமனம் செய்யப்பட்டு வேலைபார்த்துவரும் அதிகாரிகள் அவர்கள் கீழிருந்து அவர்களின் உத்திரவைப்பெற்று, அதற்கேற்றவாறு தங்கள் தங்கள் பிரதேசங்களில் உத்தியோகம் செய்துவரும் விசாரணைக்கர்த்தர்களாவார்கள். சாதாரணமாக, இச்சபையோர்களை அரசாட்சியின் தலைவன் நியமனம் செய்யலாம். அல்லது அவர்களைநியமனம்செய்யும் அதிகாரத்தையுடைய சபையும் உண்டு. இந்த மெம்பர்களுக்கும் காலவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சபைமெம்பர்களில் மூன்றிலொரு பாகமோ அல்லது பாதியோ சில குறித்த காலத்திற்கொருமுறை மாறவேண்டும். ஆகவே இப்படி மெம்பர்கள் மாறுவதனால் இச்சபை ஒருவாறு இடைவிடாமலிருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் இங்கிலாந்தில் காபினட் மெம்பர்கள் (Cabinet Members) திடீரென்று தங்கள் காபினட்டு வேலையை விட்டுவிடலாம்.

பின்னால் சில இராஜ்யங்களைப்பற்றி விவரித்தெழுதும்பொழுது அந்தந்த அரசாட்சிக்குரிய சட்ட பரிபாலன சபையை நன்கு விவரித்துச் சொல்லுவோம். இராஜாங்கத்தின் மூன்றாவது பிரிவாகிய நியாயாதிகாரிகள் என்பதைப்பற்றி இனி விசாரிப்போம்.

### நியாயாதிகாரிகள் (The Judiciary)

ஒவ்வொரு அரசாட்சியும், கவனிக்கவேண்டிய விஷயங்களில், பிரஜைகளின் க்ஷேமம் முதன்மையானது. அதற்காகவே இராஜாங்கத்தார் சட்டங்களை ஏற்படுத்தி மேற்படி சட்டங்களுக்கு ஜனங்கள் கீழ்ப்படிந்து நடக்கும்படியாகச் சில அதிகாரிகளையும் வைத்

திருக்கிறார்கள். சட்டப்படி நடக்காதவர்களை விசாரணை செய்வதும், அவர்களுக்குத்தகுந்த தண்டனை விதிப்பதும், இன்னும் ராஜாங்கத்தாருக்கும், ஜனங்களுக்கும் ஏற்படும் மனஸ்தாபங்களைக் கவனிப்பதும், அவைகளைச் செம்மையாக விசாரணை செய்து அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்து, ராஜ்யத்தில் நீதியை நிலைநிறுத்துவது மாகிய இத்தகைய வேலைகளைச்செய்ய ஏற்பட்டிருக்கும் அதிகாரிகளைத்தான் நியாயாதிபதிகள் என்று சொல்வது. இவர்களில் மேல்தரப்பு அதிகாரிகள், சட்டபரிபாலனம் செய்வோர்களால் நியமனம் செய்யயப்பட்டு வந்த போதிலும், பின்சொல்லப்பட்டவர்கள் ஏதாவது குற்றங்களில் சம்பந்தப்பட்டால் அவர்களுக்கு விரோதமாக நியாயாதிபதிகள் தீர்மானம் செய்வது சாதாரணமான விஷயமாகவிருப்பதை நாம் பார்க்கலாம். இவர்கள் விசாரணைக்குள் வரும் வியாச்சியங்களாவன:— (1) கொலை, களவு, துரோகம், பொய் சத்தியம் முதலானதுகளும்; (2) ஒருவர்க் கொருவர் தங்களுக்குள் செய்து கொண்டிருக்கும உடன்படிக்கைக்கு விரோதமான விஷயங்களும், கொடுக்கல் வாங்கல் இன்னும் இதைப்போன்ற விஷயங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுமே. இவைகளை முறையே, (1) கிரிமினல் வியாச்சியம், (2) சிவில் வியாச்சியம் என்று சொல்வது வழக்கம்.

அரசாட்சியின் பிரிவுகளில் ஒன்றற்கொன்று சம்பந்தம்:—

துரைத்தனத்தின் பிரிவுகளை நோக்குங்கால் அவைகளில், ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் சம்பந்தமில்லைபோல் தோற்றலாம். அவைகளைப்பற்றிச் சொல்லும்போதும் கூட நாம் தனித்தனியேதான் எடுத்துக் கூறினோம். ஆயினும் அவைகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலிருப்பது அரிது. ஏனென்றால் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, இத்தேசங்களிலிருக்கும் சட்ட பரிபாலன சபையோர்கள் சட்ட நிரூபண சபை மெம்பர்களாக இருந்து ஷ நிரூபண சபையின் இஷ்டத்துக்கிணங்கி நடக்கிறார்கள். வேறு சில தேசங்களிலோ சட்ட பரிபாலன சபையார், சட்ட நிரூபண சபையாரைக் கவனிப்பதே கிடையாது. இதற்கு உதாரணமாக, பிரஷ்யா, அமெரிக்காக் கண்டத்து ஐக்ய நாடுகளை எடுத்துக்கொள்ளலாம். இன்னும் சில தேசங்களில் அதாவது சிவிட்ஜர்லாண்டில் ஒன்று மற்றொன்றைச்சார்ந்தே காரியங்களை நடத்தி வருகிறது. மேலும் எத்தேசங்களில் இம்மாதிரி இந்த இரண்டு பிரிவுகள் ஒன்றுக்கொன்று இணங்கி நடக்கின்றதோ, அத்தேசங்களில் பரஸ்பரமாக ஒன்று மற்றொன்றை உண்டாக்கவும், கலைக்கவும் ஏற்படுகின்றது. முன் கூறியபடி, சட்ட நிரூபண சபையின் மேல் அங்கத்தினர்க்குச், சில நாடுகளில் கொஞ்சம் நியாய விசாரணை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

E. நரசிம்மன், பீ. ஏ., யல். டி

## பெற்றோர்களும் பிள்ளைகளும்
## PARENTS & CHILDREN

(357-ம் பக்கத்தொடர்ச்சி)

இவைநிற்க, மகன் தந்தைக் காற்றுமுதவி யெவையென ஆராய்வோம்.

‘முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே அந்தி பகலாச் சிவனை யாதரித்து அங்கமெலாம் நொந்து பெற்றுப் பையலென்றபோதே பிரிந்தெடுத்து’ ஆன பன்மருந்தும் அருந்தித் துன்புற்றுக் குழந்தை அழுங்கால் கட்டிலிலும், தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்துக் காதலித்து மக்வுக்கு நோய்காணில், தான் மருந்தருந்திக் குழந்தையின் குற்றமனைத்தையுங் குணமாகவே கொண்டு, தன்னுயிரினும் மேம்பாடாகப் போற்றிக் காப்பாற்றிவரும் தாய்க்குப் பசியென்பதே தோன்றாமல் ஊனும் உதவி, உடைகொடுத்துத் துஷ்டஸகவாஸ மெய்யவும் சூதாடிப் பொய்பேசவும் புறங்கூறவும் நியாயஸ்தலங்களில் பொய்ச்சாட்சி சொல்லவும் சிறிதேனும் இடங்கொடாமலும்,

அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு
மாதரவாக்
கொள்ளிக்கும் பட்டகந்தனக்கு மென்னக்குறித்து
நிதம்
துள்ளித்திரிகின்ற காலத்திலெந்தன் றுடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை யாகிய பாதகனே

(இதன் தொடர்ச்சி 387-ம் பக்கம் பார்க்க.)

என்று பின்பு தனது கஷ்டத்தை யுன்னித் தந்தையைப் பழியாமல் இப்பொழுதே சிறந்த பூஷணமான கல்வியைப் புகட்டவும் தம்மக்கட்குத் தீங்கு நேரிடின் தன்னுயிரைக் கொடுத்தேனும் அவ்விடுக்கணினின்றுத் தப்பிவித்தும், இங்ஙனம் போற்றி வரும் தந்தையின் நன்றிக்கும் போதுமான கைம்மாறுதவலும் நம்மாலியலுமோ! அப்படியிருக்க அவர்கள் செய்த பெரும் பேற்றை மறத்தலும் நீதியோ!

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்றபடி பெற்றோர் செய்துள்ள நன்றியைக் கொன்ற மகனுக்கும் பிராயச்சித்தமுண்டோ? அவர்கட்கு நரகமேகதி. நாம் நம் பெற்றோர்க்கு எவ்வண்ணம் நன்றியைச் செலுத்துவதுஎன்றோர் கேள்விகேட்கலாம். நாம் அவர்கட்குப் பிரியமுள்ள பிள்ளைகளாயிருந்து அவர்கட்கு ஆபத்துக் காலத்தில் உதவி, அவர்களை மரியாதை செய்து, அவர்கள் சொற்றட்டாமல் கீழ்ப்படிந்து நாமும் நல்வழியில் நடந்து திருப்தி செய்வதே நமது கடமையாகும். உண்மையான பித்ருவாஞ்சை உள்ளோனுக்கு இவைகளைச் செய்து முடித்தல் ஓர் அரியகாரியமன்று.

ஆனால் தற்காலத்துப் பிள்ளைகளிடம் இக்குணம் மாறுபட்டிருப்பதைக் காண்கிறோம். மக்கள் வாஞ்சைக்கே பெயர் பெற்ற நமது இந்தியாவில் இக்கதி வந்து நேர்ந்தது யாவரும் துக்கிக்கத்தக்கதே. மனக்கவலையாலும் நோயாலும் வார்த்திகத்தாலும் வருந்தும் பெரியோர்கள், தம்மக்கட்கு ஏதேனும் ஒரு கட்டளை இடின், இப்பாபி மக்கள் அவர்களை என்னபாடு படுத்துகின்றனர்! வயதுமுதிர்ந்த கிழவரிடம் பாம்புபோல் சீறி வெறியன்போல் விழுகின்றனர். இந்நவீன நாகரீகமும் கல்வியும் பெற்ற இச்சீமான் தன் நண்பர்களுடன் இருக்கும் பொழுது அவன் பிதா தவறி 'இப்படிப் பேசாதே அது அழகல்ல' என்று இவ்விதம் ஏதேனும் புகன்றுவிட்டால் அவர் கதி அன்றே அதோகதிதான். அவர்களைப் பிதற்றல் என்றும், ஒன்றும் அறியாக் கிழந்தானே என்றும், கர்நாடக ஆசாமி என்றும பேசி உதாகரிக்கின்றனர். இது என்ன பரிதாபம்! இது எவருடைய சாபமோ! அரைப்படிப்புப் படித்த நம் வாலிபர்கள் பலர்க்கே இக்குணம் வந்திருக்கின்றது. தன்னைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கே இவ்விரலும் சிறதுமென்றால் இவனால் தேசத்திற்கு எவ்வளவு பிரயோஜனம் உண்டாகும் என்பதை யுன்னிப்பாருங்கள். சிலர், தம் நண்பர் முன்னும், பிறர் முன்னும், தம் பிதாவை ஒப்புக்கொள்வதில்லை. இதனினும் பரிதபிக்கத்தக்க செய்கை ஒன்றும் உளதோ! இவர்களுக்குத்தக்க ஒரு நரகமும் பிரும்மனால் சிருஷ்டிக்க இயலுமோ!

இச்சந்தர்ப்பத்தில்நான்நேரில் கண்டனவும், கண்ட ஒருவரிடமிருந்து கேட்டனவுமான இருசிறுசம்பவங்களைச் சொல்லுகின்றேன்.

இந்த ஜில்லாவிலுள்ள பெரிய பாடசாலைகள் ஒன்றனின் தலைமை உபாத்தியாயர் ஒருவர், ஒருநாள் ரஸ்தா மார்க்கமாய் போய்க்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவருக்கு முன்னால் அவரது 18 வயதுள்ள மாணவனொருவன் தன் வயது சென்ற பிதாவுடன் அச்சாலையில் வந்துகொண்டிருந்தான். அக்கிழவர் தலையில் ஒரு பெரிய மூட்டையும் பையன் கையில் ஒரு சிறிய மூட்டையும் இருந்தது. அவன் தன் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் வருவதைத் தூரத்திலேயே யறிந்து, தன் மூட்டையைத் தன் தந்தையிடம் கொடுத்துத் தான் வெகு வேகமாக நடந்துவந்து உபாத்தியாயரைச் சந்தித்துச் சலாம்செய்தான். பாவம்! மூட்டை மாற்றின விஷயத்தையும், பின்னால் வருபவர் அவன் பிதாவே என்பதையும உபாத்தியாயர் அறிந்துவிட்டாரென அவன் தெரிந்துகொள்ளவில்லை. உபாத்தியாயரும் அவனுடன் பேசிவிட்டு 'அதோ வருபவர், உன் பிதா நீவா' என்று வினவ, 'அந்தக் கிழவர் யாரோ' என்று அவன் சொல்லிவிட்டான். கவட்டு உபாத்தியாயரும் அங்கொன்றும் பேசாமல் தான் முன்னமே அறிந்துகொண்ட விஷயத்தையும் காட்டாமல் சாதாரணமாக விடைபெற்றுச் சென்றுவிட்டார். பின்பு மறுநாள் காலையில் இவனுடைய சரித்திரம் முழுவதும் 600 பிள்ளைகளுக்கும் 50 உபாத்தியார்களுக்கும் முன்னிலையில் பிரசங்கிக்கப்பட்டது. அந்தத்

தலைமை உபாத்தியாயர், முதல் நாள் தன் பிதாவை ஒப்புக்கொள்ளப் பயந்த அந் நாவை அறுத்துவிடத் தனக்கு சக்தியில்லை எனவருந்தி, தாம் மூட்டை தூக்குவதற்கு அகௌரவமென மதித்த, கைகளையும் தோள்களையும் நன்றாய் நெடு நாள் ஞாபகம் இருக்கும் வண்ணம் புடைத்துவிட்டார். அவன் ஒரு வாரத்திற்கு பாடசாலையினின் றும் நீக்கப்பட்டு அக்காலத்திற்குள் அவன் பிதாவினிடமிருந்து மன்னிப்புப் பத்திர மொன்று வாங்கிவரவேண்டு மென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

இத்தகைய மனிதர்களும் உலகில் இருக் கின்றனர். இவனொ பையன்; உலகமறியாத வன் என்றியம்பலாம்: இத்தகைய குணம் கல்வியில் முதிர்ந்த பெரியோர்களுக்கும் உள தென அறியத் துக்கமாயிருக்கின்றது. கல்வி யும் கேள்வியும் முதிர்ந்த ஒரு டிப்டிகலெக் டர் தம் நண்பர்களுடன் உல்லாஸமாக வீட்டில் பேசிக்கொண்டிருந்தபொழுது, அவ ரது வைதிகமான பிதா ஸ்நாநஞ்செய்து விட்டு உள்ளே சென்றாராம். அப்பொழுது அவரது நண்பர்கள் கலெக்டரை நோக்கி 'அவாள் யார்?' என்று கேட்க 'யாரோ ஒரு சாஸ்திரிகள்' என்று அவர் சொன்னாராம். அந்த டிப்டிகலெக்டர் இப்பொழுது வேலை யை இழந்து மிக்க இழிவானஸ்திதியை அடைந்திருக்கின்றாரென யறிகிறோம்.

இத்தகைய மனிதர்கள் இருப்பது பூமி க்கே ஒரு அவகேடு தன் பிதாவை ஒப்புக் கொள்ளாத மனிதனை நமக்கெல்லாம் உலக பிதாவான ஈசன் ஒப்புக்கொள்வாரா? அவ னுக்கு நற்கதியுண்டா? பெற்றோர்கள் தம் மக்கள் தங்களை அவமதிக்கின்றனர் என் றறிய வருவரேல், பின்பு அவர்மனம் என்ன பாடு படும்! பெற்றோர்கள் வயிறு எரிந்தால் பிள்ளைகள் வாழ்வார்களா? ஒருநாளுமில்லை. ஆதலால் நண்பர்காள்! எக்காரணம்பற்றி யும் நம் பெற்றோரை நாம் அவமதியாமல் கௌரவப்படுத்தவேண்டும்.

ஒருவேளை நம் பெற்றோர்கள் சிறிது கோபிஷ்டர்களாயும், அநாவசியமாய்த் தொந்தரை செய்பவராயும் இருக்கலாம். அப்படி யிருப்பினும், நாம் அவர்களிடம் சிறிதேனும் கோபியாமல் அவர்களை மரி யாதை செய்யவேண்டும். ஏனெனில், பிழை செய்தல் மனிதர்களுக்கே சுபாவமாகும். ஆயினும், நம்மினும் எவ்விதத்திலும் பெரி யோரான நம் பெற்றோர்கள் பிழைவதைப் பிழையாகவே கொள்ளல் கூடாது. ஏனெ னில், புவியில் பிறந்த மக்களாகிய நமக்கு நம் பெற்றோர்களினும் மேம்பட்டவர்கள் கிடையாது.

'எப்புவிகளும்புரக்குமீசனைத் துதிக்கவேண்டின், அப்பனே ஆயேயென்போம் அவரையே துதிக்க வேண்டின், ஒப்புமை உளதோ வேலை புலிகிக் கட புலனித் றேன்றஞ், செப்பரும் தெய்வ மன்னர் சேவடி போற்றாய் நெஞ்சே'

என்றவாறு கோயில் சென்று துதிக்கு மிடத்தும் அப்பனே! அய்யனே! அன்னை யே! என்கிறோம். ஆனல் அத்தகையே பெற் றோரைப் போற்றவேண்டின் அவருக்கு ஒப்புண்டோ? ஏனெனில், உலகத்தில் நாம் எதை இழந்தாலும் சிறிது முயற்சியால் பெறலாம்.

'மனையாள் வீயின் மற்றோர் மனைவியைக் கொள்ள லாகும், தனையாதியரி தப்பின் தனித்தனி பெற லாம், பின்தன் மனைபொருள் நீக்கின் மற்றோர் பொருளையும் பெறலாம், பெற்ற அன்னையிறக் திடின் பின் வேறு அன்னைவரு வாரோ நெஞ்சே.

என்று கூறியுள்ளார் பெரியோர். ஆத லால் நம்மைப் பெற்றோரே நமக்குப் பெரி யோர். அவர்களே நமக்குத் தெய்வம்; நமது குருவும் அவர்களே. அவரே நமது உயிர் நிலையு மாவார். அவர்களுடைய வார்த்தை யே அமிர்தம். அவர்களுக்குக்கீழ்ப்படிதலே நாம் பிறந்தபயனாகும். மாதுர் வாக்கிய பிதுர் வாக்கிய பரிபாலனத்தை, ஸ்ரீராமசந்திர மூர்த்தியே ஜனங்கள் அறியும்வண்ணம், நடந்து காட்டியிருக்கின்றனர். பெற்றோ ருடைய தேகத்தைக் காப்பதினும் அவர்கள் சொல்லை மறுக்காமலிருப்பதே மேலென் பது ஸ்ரீராமரது கொள்கை.

'தாய் சொற் கேட்டலும் தந்தை சொற் கேட் டலும்; பாசத்தன்பினை பற்றற நீக்கலும், ஈசர்க்கே கடன்'—

என்றார் பிறரும். 'தாய் சொற்றுரந்தால் வாசகமில்லை' 'தந்தைசொன் மிக்க மந்திர மில்லை' என்ற ஔவையின் 'தந்தையுறை

தட்டினவன் தாயுறை இழந்தோன் செந்தழலின் வாயின் இடை சேர்வது மெய்கண்டீர்' என்ற வசனத்தையும், 'தாயாரை வைவர் இருந்தென்ன போயென்ன' என்ற பட்டினத்தார் வாக்கையும் பிரதிபிம்பிக்கச் செய்தவரான ஸ்ரீராமர் கானகம் போகலாகாதெனக் கூறிய தன்னைச் சேர்ந்தோரை நோக்கி,

'மகர வேலை மண்தொட்ட வண்டாடுதார்ச்
சகரர் தாதை பணிதலை நின்று தம்
புகரில் யாக்கையினின்றுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்ற தன்றோ வெனா.

'மான் மறிக்கரத்தான் மழுவேந்துவான்
தான் மறுத்திலன் றாதை சொற்றாயையே
ஊனறக் குறைத்தானவ்வோனருள்
யான் மறுப்பதென் றெண்ணுவதோ'

என்று பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்யும் வண்ணம் சகரருடைய அறுபதினாயிரம் மக்களும் தம் உயிர்களையே விட்டிருக்கவும், அந்தணனான பரசுராமனும் தன் தாதையாகிய ஜமதக்னிமுனிவன் சொற்கடவாமல் தாயையே சங்கரித்திருக்கவும் நான் மட்டும் என் தர்ம பிதாவின் வாக்கியத்தை மறுப்பதோ எனக் கூறி, கானகம் சென்றனர். இவர் போன்றவர்களன்றோ புத்திரர்கள்.

நம் பெற்றோரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய நம் சௌகர்யங்கள் எல்லாவற்றையும் இழக்கலாம். அவ்வண்ண மிழத்தலால் நமக்கு ஒரு குறைவுமில்லை; கௌரவமும் கீர்த்தியுமே ஆகும். பீஷ்மர் என்பவரைப்பற்றி அனைவரும் கேட்டிருக்கலாம். பாரதயுத்தத்தில் அவருடைய பெயரே குன்றின்மேலிட்ட விளக்குப்போல் பிரகாசிக்கின்றது. அதற்குக் காரணம் யாது? அவரது பிதிர் வாஞ்சையே. அவர் பிதா சந்தனுராஜன் சத்தியவதி யென்னும் ஒரு கன்னிகையை மணம்புரிய எண்ணினான். அவள் பிதா, பீஷ்மருக்குப் பட்டத்துரிமை இருக்கும் வரையில், தன் பெண்ணைச் சந்தனுவுக்குக் கொடேனெனப் புகல, தன் மைந்தனிடம் மிக்க வாஞ்சையுள்ள மன்னன் இருதலைக் கொள்ளியினிடைப்பட்ட எறும்புபோல் மனம்புழுங்கி ஒன்றும் செய்ய இயலாமல் வருந்தினான். இதனை எவ்விதமாகவோ அறிந்த அப்புத்திரசிகாமணி, அப்பெண்ணின் பிதாவிடம் சென்று, பட்டத்தைத் தான் ஏற்பதில்லையென்றும், ஒருவேளை தனது மக்கள் எங்கு பாத்தியத்தைக் கொண்டாட வருவார்களோவென்று ஐயமுற்றால், தான் விவாஹமே செய்துகொள்வதில்லையென்றும் பிரதிக்ஞை செய்து பிரம்மசர்ய விரதத்தையே கொண்டனர். இதனையறிந்த மன்னன் மனம் எவ்விதமிருக்கும்? தன் குமாரன் தனக்காகச் செய்த பரித்யாகத்தைக் கண்டு கண்ணீர் சொரிந்து அவருக்கு ஸ்வச்சந்த மரணசக்தி யென்னும் (தான் இஷ்டப்பட்டால் மரணத்தை வருவிக்கவும் விலக்கவுங்கூடிய ஒரு சக்தியை) சக்தியை ஈன்றருளினர். ஸ்ரீராமரும் பீஷ்மரும் தங்கள் பிதிர்க்களைத் திருப்திசெய்யவே தங்கள் சௌகர்யங்களை யெல்லாம் இழந்தனர். ஆனால் தன் பெற்றோர்களைக் காத்தலின்பொருட்டு உயிரையே விட யத்தனித்த மற்றொரு மைந்தனுண்டு.

கௌசிக முனிவரேவலினால் நக்ஷத்ரிகன் பின் தொடர தன் மனைவி மக்களுடன் காசி நோக்கி ஹரிச்சந்திரன் போய்க்கொண்டிருக்கும் ஸமயத்தில் அம்முனிவரது சூழ்ச்சியால் வழியின் எதிரில் தீப்பிடித்தெரிய ஆரம்பித்தது. அப்பொழுது நக்ஷத்ரிகன் அவ்வக்னி பகவானுக்கு யாதேனும் பலியானால் அது தீர்ந்துவிடுமெனச் செப்பினர். அச்சமயத்தில் அருங்குணம் வாய்ந்த சந்திரமதி தன் உயிரை இழந்தேனும் பிறரைக் காப்பாற்றலாமெனக் கருதித் தான் போய் நெருப்பில் விழப்போக, அவள் மைந்தன் லோகிதாசன்,

அன்னைத்தானேக மைந்தன் அலறிச் சென்றடி
வீழ்ந்து அன்னாய், என்னை நீர் பயந்திருங்கள் இடு
க்கணுக்குதவவன்றோ, முன்னையூழ் விதியினாலே
முந்தயான் றழலில் வீழ்வேன், பின்னை நீர்
பிழைமி னென்றான் பெருகிநீ ரருவிக் கண்ணான்.

என்று புத்திரர்களின் கடமையை யெடுத்துக்கூறித் தன்னுயிரையும் மாய்த்துக்கொள்ள வாரம்பித்தான். மக்களெல்லாம் பிள்ளைகளாவாரா? ஸ்ரீராமரும் பீஷ்மரும் ஸகரரும் லோகிதாஸனும் பிறந்து வளர்ந்த இந்நாட்டிலுள்ள நாமோ தர்ம மார்க்கத்தினின்றும் பிறழ்ந்து நடப்பது? கூடவே கூடாது.

'ஊருஞ்சதமல்ல உற்றார்சதமல்ல' என்று இவ்வாறு உலகத்தையே வெறுத்துள்ள பட்டினத்தாரும் 'அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே' என்று தன் தாயிறந்ததைக் குறித்துத் துக்கித்தனரென்றால் உலகமாயையிலே மூழ்கிக்கிடக்கும் நாம் நம்பெற்றோர்களிடம் எவ்வளவு அன்பு பொருந்தியவர்களாக இருக்கவேண்டும்? பெற்றோர்களின் பெருமையும் அவர் இல்லாவிடில் நமக்குண்டாகும் சிறுமையும் இவ்வளவென்றறியவும் முடியாது. அதனை விளக்கவே காளமேகரும் தம் வழக்கப்படியே ஈசனைக் குறித்து,

'வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன், கல்லா லெறியப் பிரம்பால் அடிக்க விக்காசினியில், அல்லாற் பொழிற்றில்லை யம்பலவானர்க் கொரன்னை பிதா, இல்லாத தாழ்வல்லவோ இங்ஙனேயெளிதானதுவே.'

என்று நிந்தாஸ்துதியாக பாடியிருக்கின்றார்.

ஆதலால் நண்பர்களே! நம் பெற்றோரின் கௌரவம் இவ்வளவவ்வளவன்று; அவர்கள் நமக்காகப் படும் பாடும் சிறிதன்று. ஆகையால் நாம் அவர்களுக்கு எப்பொழுதும் மரியாதை செய்து அவர்கட்கு இடுக்கணுற்றுழி நம் உயிரைக் கொடுத்தேனும் அவர்களை அவ்விபத்தினின்றும் நீக்க வேண்டும். அவர்கள் சொல்லுஞ் சொற்கள் கீழ்ப்படிவதற்குக் கடினமாயிருப்பினும், சிறிதேனும் சலிப்படையாமல் அவைகளை நிறைவேற்றவேண்டும்.

கீழ்ப்படிதலிலும் இருவகை .யுண்டு. ஒன்று மனத்துடன் கீழ்ப்படிவது, மற்றொன்று பயத்துடன் கீழ்ப்படிவது. நமது பெற்றோர்களிடம் நாம் இவ்விருவகையிலும் கீழ்ப்படிய வேண்டும். சில வேளை அவர்கள் ஏவும் தொழில்கள் நம்மனதிற் கொவ்வாதிருக்கலாம். ஆயினும் அவர்கள் நம்மிடம் அதனை ஒப்பித்ததற்காகவாவது சிறிதேனும் முணுமுணுக்காமல் அக்கட்டளைக் கடங்கிக் காரியத்தை முடித்தல் வேண்டும். அதுவே வீரர்களுக் கழகு. 1854-ம் வருஷத்திய கிரிமியன் யுத்தத்தில் ஆங்கில ஸேனாதிபதி யொருவர் ஏதோ பிசகாக ஒரு ஆபத்தான கட்டளையிட்டார். எந்த புத்திமானும் அவ்விதக் கட்டளை இட்டிருக்கமாட்டான். அவ்விதம் பிறந்த ஓர் உத்திரவினால் 25 நிமிஷத்திற்குள் ஸுமார் 400 போர்வீரர்கள் உயிரிழக்க நேர்ந்தது. ஆயினும், அவ்வுத்திரவு தம் தலைவரிடமிருந்து வந்தமையால் வரப்போகும் ஆபத்தை நன்கறிந்திருந்தும் போர்வீரர்கள் அனைவரும் சிறிதேனும் யோசியாமல் முன் சென்றனர்.

உயிரிழந்தேனும் கீழ்ப்படிதல் என்னும் குணத்தை நிறைவேற்றவே அவர் சென்று உயிரிழந்தனர்! நாமும் பெற்றோர்களிடம் அவ்வண்ணம் செய்து அவருக்காகவேனும் அல்லது பிறரது சொல்லுக்கேனும் பயந்து கீழ்ப்படியாவிட்டாலும், சுயநலம் பாராட்டியாவது அவ்வண்ணம் செய்யவேண்டும். இல்லாவிடில், பின்பு நாமும், பிதாவுக்கு ஓட்டிற் கஞ்சிவார்த்த பாவியின் நிலைமையை அடைவோம். நாம் நன்னெறியினின்று மாறாமலிருப்பதே அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும். தன் மகனைப்பற்றி உலகெலாம் புகழின் அவன் அன்னையின் மனம் எவ்விதம் இருக்கும்? ஆனதுபற்றியே வள்ளுவரும்

ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பள் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

என்று கூறியுளார். ஆதலால் நண்பர்களே! நாம் நல்வழியில் நடந்தும் அவர்களை மரியாதைப்படுத்தியும், அவர்கள் முகம் கோணாமல் இன்பமூட்ட நாம் முயல்வோமாக! அப்பொழுதே நமக்கு மதிப்பு; அப்பொழுதே நமது கீழோர்க்கும் நம்மிடம் அன்பும் மரியாதையும் இருக்கும். அப்பொழுதே உலகத்தார் யாவரும் 'இவன் றந்தைஎன்னோற்றான் கொல்' என்று நம்மைக் கொண்டாடுவர்.

புவியிற் பிறந்த பயனை வீணாக்காமல் அடக்கம், பொறுமை, தயை, தாட்சணியம், உண்மை, பெரியோரைப் போற்றல், பெற்றோரைப் பேணுதல் முதலிய நற்குணங்களை முற்றுங் கைக்கொண்டு, பொய்ம்மை, புறங்கூறல், செய்ந்நன்றி மறத்தல், பெரியோரைப் பழித்தல், பொய்க்கரிபேசல், களவாடல் முதலிய தீக்குணங்களை ஒழித்து நமக்கும் பிறர்க்கும் நன்மையுண்டாகும் வண்ணம் வாழ்ந்து நற்பெயரையடையக் கடாக்ஷிக்கும் வண்ணம் ஈசனை நாம் பிரார்த்திப்போமாக!

ஆர். விசுவநாதய்யர்.

# ராமபட்டன்

## (ஒரு சிறிய கதை)

## RAMABHATTAN (A SHORT STORY)

(362-ம் பக்கத் தொடர்ச்சி.)

பக்கத்திலிருந்த அவருடைய தாயாருக்குக்கொஞ்சம் கோபம் வந்தது. டாக்டரைப் பார்த்து 'உங்களுக்கென்ன தெரியணும். எனக்குத்தான் தெரிந்திருக்கே போராதா. மாஜிஸ்திரேட்டுத்தியோகமான பிறகு தானுக்கு மிந்தத் தீராத நீர்ரோகம் வந்தது. அது முதல்கொண்டு தினம் மருந்துதான். பாதிச் சம்பளம் இதிலேயேதான் போரது ஒண்ணு போனா ஒண்ணு. டாக்டரைக் கூப்பிடாத நாளுண்டா; பணங் கொடுக்காத நாளுண்டா. வியாதி மாத்திரம் முத்தியிருக்கேயொழிய, வேறே குணத்தைக் காணோம். முன்னாலேயிருந்த ஊரில், பிரசித்திபெற்ற ஒரு யூனானிவைத்திய சாயபு, தங்கம் அப்பிரகமெல்லாம் சேர்த்து பஸ்பஞ்செய்து அதை ஒரு மண்டலத்திலே வைச்ச ஒரு மண்டலம் சாப்பிட்டா லிந்தப் பிரமேக வியாதி அடியோடே போய்விடுமென்று ரொம்பச் சொன்னான். அப்படியவன் வெகுபேர்களுக்கு அனுகூலம் செய்திருக்கானாம். நானும் நாட்டுப் பெண்ணும் எங்களாலே கூடியமட்டும் சொன்னோம். 'நான் அடியோடே போரதானாலும், பதிவுசெய்யாத வைத்தியனிடம் மருந்து சாப்பிடமாட்டேன்' என்று தடுத்துவிட்டான். என்ன பதிவோ யாருக்குத் தெரிகிறது? எத்தனையோ யுகங்களாகப் பெரியோர்களாலனுஷ்டிக்கப்பட்ட வைத்திய சாஸ்திரத்தில் நம்பிக்கை யில்லாமல்போகக் காரணம் தெரியவில்லை. இதற்குமுன் அவர்களெல்லோரும் உயரமும் பெருமனுமா தீர்க்காயுசாத்தானிருந்தார்கள். நம்மவர்கள் வைத்தியம் செய்யும்பொழுது இப்படி ஒரு வியாதியையுங் காணோம்; பணச் செலவுமில்லை. பெண்டுகளும் டாக்டருதவி யில்லாமலே பல மக்களையும் பிரசவித்திருக்கிறார்கள். வலிப்பும் மாரடைப்பும் தூக்கலும் வீக்கலுமாகவா நாங்களெல்லோரு மிருந்தோம். காலம் கலிகாலம். தொட்டதும் சாவு மிப்போ மயக்கரது. இதையெல்லாம் உங்களிடம் சொன்னா லுங்களுக்கு ருசிக்குமா; வையுறுக்கு நீக்களே பாக்கி அவரமும் செய்தீர்களாமே. எல்லாத்திலும் ரொம்ப கெட்டிக்காரர்போலிருக்கு. குழந்தைக்கு நல்ல மருந்தாக் கொடுங்கோ. அவன் காயத்தைப் பார்த்தீர்களா; காலமேயே அம்பட்டன் பச்சிலையை வைத்துக்கட்டுகிறேனென்றான், நானும் கட்டட்டுமென்று கெஞ்சினேன். நான் சொன்னா அவன் கேட்கிறானா, என்று'—, இதற்குள் முதலியார் போஜனம் முடித்துவந்து, 'அம்மா! உன் பேத்தல் போரும். சும்மாயிரு. அப்புறம் பேர்' என்றனுப்பிவிட்டு 'ஸார் இது வலிக்கிறதே என்ன செய்யலா' மென்று இடது தோளைக் காட்டினார். கட்டைப் பிரித்து வென்னீர் ஜலத்தால் கழுவி மறுபடியும் கட்டிவிட்டு மறுநாள் காலையில் மருந்துகொண்டு வருவதாகச் சொன்னார். குழந்தைக்காக ஒரு குப்பியில் ஆறு வேளைக்கு இருந்த மருந்தை, மூன்று மணிக்கொரு தரம் அளந்து கொடுக்கும்படி ஒப்புவித்து டவுனுக்குத் திரும்பினார்.

இந்த டாக்டர் ஆயுர்வேத வைத்தியத்தை ஆதிமுதல் அருவருப்புடன் நிந்தித்தவர். அவ்வைத்தியத்தை யாதரிப்பவர்களையு மிகழ்ந்தவர். ஆனால் இவர் உத்தியோகஞ்செய்தவிடங்களில் ரணவைத்தியத்தில்மட்டுமிவருக்குக் கியாதியேயன்றி, மற்றவியாதிகளுக்கு மருந்தை யபேக்ஷித்தவர்கள் பெரும்பாலும் அவரிடம் வைத்தியம் செய்துகொள்ளும் வழக்கமில்லை. இவரிருக்கும் டவுனில் வெகு காலமாக ராமபட்டனுக்கு நல்ல பெயர். புராதனமாய் ராஜ ஸமஸ்தானங்களில் ஏராளமாய்ச் செலவு செய்து செய்யப்பட்ட பற்பல விசேஷமான மாத்திரைகளில் பரம்பரையாயுபயோகித்து மிகுந்ததைக் கைவசம் வைத்து தன்வந்திரியின் நூற்களையும் சரித்து அனுபோகத்துடன் உபயோகித்து வந்தார். இரண்டு வருஷங்களுக்குமுன், டாக்டரால் கைவிடப்பட்ட ஒரு தனிகனை ராமபட்டன் அனுகூலம் செய்தது முதல், டாக்டருக்கு ஆயுர்வேத வைத்தியத்தில கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது. கிரமேண, ராமபட்டனைச் சிநேகம் செய்துகொண்டு அவ்வைத்திய முறையின் ரகசியங்களை நல்ல எண்ணத்துடன் கற்க ஆரம்பித்தார். ராமபட்டனும், ஸ்கூல் முடிவு பரீக்ஷையில் சர்டிபிகேட்டுப்பெற்று ஆயுர்வேதகலாசாலையில் தேர்ந்த அவந்த 30 வயதுள்ளவராகசு

தரப்பட்டனென்னும் அவனுடைய மகனும், டாக்டரிடம் சரீர அமைப்பைப்பற்றியும் மேல் நாட்டு வைத்தியச் சிறப்பையும்பற்றியும் தெரிந்துகொண்டார்கள். வைத்தியருடைய பரிச்சயத்தால் டாக்டர் ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தின் மகிமையையும் மூலிகைகளின் சிறப்பையும் அறிந்தாராதலால் அவ்வைத்தியத்தில் அவருக்கிருந்த அருவருப்பும் பகையும் நீங்கின.

அன்று அர்த்த இராத்திரியிலேயே குழந்தைக்குத் தோஷங் கண்டுவிட்டது. உடனே டாக்டரையழைக்க வண்டியனுப்பினார். முதலியாருக்கும் காயத்தில் வலியதிகரித்தது. காலை 9-மணிக்கு டாக்டர் வந்து குழந்தைக்குக் கொண்டுவந்த மருந்தைக் கொடுத்தார். கொஞ்சமேனும் குணத்துக்கு வரவில்லை. ஒரு மணி நேரத்திற்கெல்லாம் பல் கிட்டிவிட்டது. அகத்திலுள்ளவர்கள் அழத்தொடங்கினார்கள். டாக்டர், முதலியாரின் அரைக்குச்சென்று காயத்தின் கட்டையவிழ்த்தார். நிரம்ப சீப்பிடித்திருந்தது. பக்கங்களி லதுக்கும்பொழுது நாற்றமுள்ள சாமான் வெளியே வந்தது. சுத்தஞ்செய்து பார்த்தபொழுது புரையோடியிருப்பதாகத் தெரிந்தது. க்ஷவரக்கத்தியிலிருந்த அழுக்கு உள்ளே பதிந்திருப்பதால் ஆபரேஷன்செய்துதானாக வேண்டுமென்று சொன்னார். இதைக்கேட்டதும் முதலியாருக்கு மூர்ச்சையாய்விட்டது. இதற்கு உபசாந்தி செய்துகொண்டிருக்கையில், குழந்தையின் அபாயஸ்திதியையறிந்த முதலியாரின் தாயார் டலாயத்தையனுப்பி ராமபட்டனை யழைத்துவரும்படி சொன்னாள். 'நான் அங்கே வரமுடியாது' என்று உறுதியாய் அவர் பதில் சொல்லிவிட்டார். டலாயத்து திரும்பி பங்களா வாயிலண்டை வந்தபொழுது, ராமபட்டனுடைய மகன் வீதியில் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்துக் கும்பிட்டு, அவனும் வைத்தியம் செய்யப்பட்டவனாகையால் அவனை யுள்ளேயழைத்துவந்தான். தன் தகப்பனுக்கு நேர்ந்த அவமதிப்பை யவனுணர்ந்தவனல்லன். உள்ளே சென்ற பொழுது, அங்கே டாக்டரைக்கண்டு வந்தனம் செய்தான். அவன் பிறகு குழந்தையைக் கையைப் பிடித்துப்பார்த்து அத்யாஸன்ன ஸ்திதியிலிருப்பதையறிந்து டாக்டருடைய வேண்டுகோளின் மேல் சிலமூலிகைகளை வரவழைத்துத் தவிரபோட்டு ஒரு மாத்திரையையுரைத்துக், கண்ணில் கலிக்கமும் போட்டான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குழந்தை தலையையசைத்தது. பிறகு மூலிகைகளின் ரசத்தில் சில மாத்திரைகளை யுரைத்து முலைப்பாலில்கலந்து புகட்டும்படிச் செய்தான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் மலஜலம் பிரிந்து, குழந்தையும் கண்ணைத் திறந்தது. அழுகை சப்தம் கேட்டதும் முதலியார் அங்குவந்தார். அங்கோர் வாலிபன் மருந்துப் பெட்டியை முன்வைத்து வீற்றிருப்பதைப் பார்த்தார். 'இவன் யாரென்று' டாக்டரைக் கேட்டார். 'இவனிவ்வூர் வைத்தியர் ராமபட்டனுடைய மகன். வைத்தியத்திலிவனும் தேர்ந்தவன். உங்களுடைய குழந்தையை இவன்தானிப்பொழுது வந்து காப்பாற்றினான்' என்றார் டாக்டர். முதலியார் கோபத்துடன் 'நான் பதிவுசெய்யப்படாத வைத்தியரிடம் மருந்து பெற்றுக்கொள்வதில்லையென்று சொல்லியிருக்கிறேனே. இவனையேன் அழைத்தீர்கள்' என்று கேட்டார். அதற்கவர் தாய், 'குழந்தைக்குங்கூட அந்தச் சட்டமுண்டோ' என்று சந்தேகித்து, பிழைக்காது என்று டாக்டர் கைவிட்ட பிறகு இவ்வூர் வைத்தியருக்குச் சொல்லியனுப்பினேன். அவருன்னால் அவமதிக்கப்பட்டபடியால் வரமறுத்துவிட்டாராம். வழியில் இவரைக்கண்டு டலாயத்து அழைத்து வந்தான். மருந்து கொடுத்ததிலனுகூலமாச்சுது. பதிவுசெய்யாத வைத்தியனால் என்னருமைக் குழந்தை உயிர்பெற்றெழுந்தால் அதுவுங்கூட வேண்டாமென்பாயா; வேணுமானால் பக்கத்துத் தபாலாபீஸிலாவது ரிஜிஸ்திராபீஸிலாவது இவரைப் போய்ப் பதிவு செய்துக்கொண்டு வரச்சொல்லுகிறேன். குழந்தையைப் பிறகாவது அங்கீகரிப்பாயென்று நம்புகிறேன்' என்றாள். முதலியாருக்கு ஒரு பக்கம் கோபமும், ஒரு பக்கம் சிரிப்புமாயிற்று. பிழைத்தெழுந்ததில் சந்தோஷமுற்று, டாக்டரையழைத்துத் தன் ரூமுக்குள் சென்று "நீங்களே மருந்து கொடுத்திருக்கவேண்டும். பதிவில்லாத வைத்தியன் மருந்து கொடுத்ததைப் பார்த்துக் கொண்டு நீரங்கிருந்தது சட்டப்படி பிசகு. அதிருக்கட்டும்; எனக்கு இராத்திரி முழுவதும் உறக்கமில்லை. காயம் ஜாஸ்தியாய் வலிக்கிறது. ஆபரேஷன் செய்தாவது சொஸ்தம் செய்யுங்கள்' என்றார். அப்பொழுதுதான் அங்கு வந்த அவர்

தாய், மிக்க மனவருத்தமுற்று நானுயிருடனிருக்கும்வரை, என் கழுத்தை யறுத்தாலும் என் மகன் பேரில் கத்திவைக்கச் சம்மதியேன், இவ்வூர் வைத்தியன் கத்திவைக்காமலேயே சொஸ்தம் செய்வானும். அவரையே கூப்பிடலாம்' என்றாள். உள்ளே போகும்படி தன் தாயாரை யதட்டியனுப்பிவிட்டு, 'தூக்கம் வரும்படி ஒரு மருந்தைக் கொடுத்தால் நலமாயிருக்கும்' என்று டாக்டரை வேண்டினார். சாயங்காலம் வந்து ஆபரேஷன் செய்வதாய்ச் சொல்லி உறக்கத்துக்கு மருந்துகொடுத்தார். மருந்தைக் கொடுத்த 10 நிமிஷத்திற்கெல்லாம் முதலியார் உறங்கினார். பிறகு முதலியாரின் தாய் வந்து காயத்தைப்பற்றி விசாரித்தாள். புரையோடியிருப்பதால் ஆபரேஷன் செய்யத்தான் வேண்டும் என்று சொன்னதைக் கேட்டு ஸ்திரீகளழத் தொடங்கினார்கள். அவ்வைத்தியவாலிபன் அவர்களைச் சமாதானம் செய்து, தன்தகப்பன் மருந்தாலேயே ஆற்றிவிடுவாரென்று சொன்னான். அவர் வருவதில்லையென்று மறுப்பதால், அவரை யழைப்பதற் கென்னவழியென்று எல்லோரும் யோசித்தார்கள். டாக்டருக்கு நிரம்பசிநேகமானதால் அவர் கட்டாயப்படுத்தினால் வருவாரென்று வாலிபன் சொன்னான். ஸ்திரீகளின் வேண்டுகோளுக்கிசைந்து, டாக்டர்தானே சென்று ராமபட்டனை நல்ல வார்த்தைசொல்லி அதிகாரியால் அவமானம் வராமல் தான் பார்த்துக்கொள்வதாய்ச் சொல்லி யழைத்துவந்தார். ராமபட்டன் வந்து பார்க்கும்பொழுது முதலியார் தூங்கிக்கொண்டிருந்தார். காயத்தைப் பார்த்து அதில் புரையெண்ணெயில் நனைத்த பஞ்சையடைத்து, மேலே ஒரு பத்தையும் போட்டு டாக்டரைக் கட்டச்சொல்லி அங்கிருந்த நாற்காலியிலுட்கார்ந்தார். டாக்டர்கட்டி முடியும் சமயத்தில் முதலியார் துயிலெழுந்தார். ராமபட்டன் தன் நாற்காலியிலுட்கார்ந்திருப்பதைப் பார்த்து 'இவரேங்கே வந்தாரென்று' உறக்கக் கேட்டார். 'உம்மை ஆப்ரேஷனிலிருந்து காப்பாற்றிச் சொஸ்தம் செய்யத்தான் வந்தேன். வேஷத்தைப் பார்த்து என்னை நாவிதனென்று நீர் அவமதித்ததாலெனக்கு மதிப்புக் குறைவுமில்லை. ஆயுர்வேதத்திற்குள்ள பகுமானமும் குன்றாது. அதுபோல், பதிவுபெற்ற டாக்டராயிருந்து கத்தியை எடுத்து உமக்கு ஆபரம் செய்தாலும் தக்கமருந்தின் கையில்லாமல் வியாதியை அநுகூலம் செய்யக்கூடாமல் என்னையும் என் மகனையும் கொண்டு வைத்தியம் செய்யப் பார்த்திருந்ததால் மேல் நாட்டு வைத்தியத்திற் கோரேளனமு மேற்படவில்லை. வைத்தியசுந்தமே இல்லாமல் தாரதம்மியமறியாமல் பதிவு செய்த டாக்டரைக்கொண்டு உயிரிழப்பது மேலேயன்றிப் பதிவு பெறாத பிஷக்கையோ யூனானி வைத்தியரையோ கொண்டு உயிர்பெற மாட்டேனென்ற வீண் விரதம் வைத்த உம்மைப்போல் பட்டம்பெற்ற தேசாபிமானிகள் பலரிருந்தல்லவோ இத்தேசம் இந்நிலைமையி லிருக்கிறது! உம்மிடம் வைத்தியம் செய்து, சம்பளம் பெற நான் வரவில்லை. உம்முடைய தாயார் பிரார்த்தித்தழைத்ததாலும் டாக்டர் வேண்டியவராதலாலும் நானிங்கே வந்தேன்' என்று சொல்லி வைத்தியரெழுந்து வெளியே சென்றார். முதலியாருக்கு மீசைகள் துடித்தன. டாக்டரைப்பார்த்து 'நீராகவே ஆயுர்வேதமுறைகளைக் கற்று உம்முடைய சொந்த மருந்தைக் கொடுத்தாலும் அருந்தலாம், அப்படிச் செய்யாமற் பண்டிதன் கொடுத்ததை வாங்கி எனக்கு உபயோகித்திருக்கிறீராதலால் சட்டப்படிக் குற்றம் செய்தவராகிறீர். நான் எப்போதும் சட்டவிரோதமாய் நடக்கேன்; அப்படி நடப்பவர்களைச் சும்மாயும் விடேன்.' நீர் 'போர்ப்பது' என்னும் குற்றத்தைச்செய்தீரென்று என் நேசர் டாக்டர் நாயுடுக்கு எழுதி உம்மைச் சரிவர விசாரிக்கச் செய்கிறேன். இனி உம்மை நம்பி உம்மிடம் வைத்தியம் செய்துகொள்ளச்சம்மதியேன். நீர் இதுவரைவந்து செய்ததற்காகக் கூலி இதோ எடுத்துக்கொள்ளும்' என்று கொஞ்சம் ரூபாயை முதலியார் எண்ணி அவர் முன்னளித்தார். டாக்டரும் சினந்து, முதலியாரைப் பார்த்து, 'நீர் இந்துதேச வாசியாயிருந்து தேசாபிமானமில்லாமல் புராதனமாய்ப் பெயர்பெற்ற ஆயுர்வேத யூனானி முறைகளை வெறுப்புடன் தள்ளுகிறீர். மேனாட்டு வைத்திய சாஸ்திரம் படித்துப் பரீக்ஷைசெய்து வேலையிலமர்ந்தவுடன் எனக்குமிப்படிப்பட்ட மௌட்டியமிருந்தது. பிறகு தெய்வகதியாலிந்த வைத்தியருடன் கலந்து அம்முறைகளையும் கற்றபின், மேல் நாட்டு வைத்தியத்திலுள்ள நம்பிக்கை இதிலுமேற்பட்டுவிட்டது. ஜன்னி தோஷம் சைத்தியபித்தியமித்திபாதி வந்தட சமய

களிலும், சில பிரபலமான வியாதிகள் விஷயத்திலும், நாட்டு வைத்தியமே மிக்க குணமுள்ளதென அறிந்திருக்கிறேன். அதற்கு திருஷ்டாந்தமும் உம்முடைய குழந்தையே. லோகப்பிரசித்தரானலாகிஸ் துரையவர்களைப்போன்ற நிஷ்பக்ஷபாதிகளுக் கல்லவோ ஆயுர்வேத யுனனி முறைகளின் அருமை தெரியவரும். நம் வயது முதிர்ந்த அம்மையார் களுக்குத் தெரிந்த கைம்மருந்துகளும் பிரயோகங் களும் பிரபலமான சில டாக்டர்களுக்குத் தெரியவரா. பதிவு செய்யப்பட்டவன், ஆயுர்வேதமுறையைத் தானே யுபயோகிக்கலாமானுலும் மருந்தைத் தயார் செய்யவோ வேறு ஒரு ஆயுர்வேதவைத்தியனை உதவிக்குத் தன்னுடன் வைக்கவோ கூடாதென்றுல் இச்சட்டத்தை கவனத்தோடு நிர்மாணம் செய்திருப்பதாக ஏற்படவில்லை. வைத்திய மறியாமற் டாக்டர் பட்டம்பெற்று சட்டத்தில் தேர்ந்த பிரசித்திபெற்ற ஒருவர் இம்மாதிரி அபிப்ராயப் பட்டிருக்கிறுர். அவரைக்காட்டிலும் உமக்கு எவ்விதத்திலும் இவ்விஷயங்களில் ஞானமிருப்பதாகத் தெரியவில்லை. நீர் பெரும் அஞ்ஞானி. தேசாபிமானங் கெட்டு துரபிப்பிராயம் கொண்டிருக்கு மும்மிடத்தில் பிரதிபலனைப்பெறுவதுங்கூட எனகருத்தகாது. ஆகையால் இந்தத் தொகையை அங்கீகரிக்க இஷ்டமில்லை. இன்று முதல்நான் ஆயுர்வேத முறையையும் விசேஷமாகக் கற்று, மேல்நாட்டு அனுபோகத்தையொட்டி வைத்தியம்செய்யத்தீர்மானித்திருப்பதுடன் நாட்டுவைத்தியம் விருத்தியாகும் விஷயத்தில் மிக்க சிரத்தை காட்டுவேனென்பது திண்ணம்' என்று சொல்லி அவ்விடம் விட்டகன்றுர். டாக்டருடைய ரிஜிஸ்திரேஷனை நிராகரித்திருப்பதாக உத்திரவு வருமுன், தன் வேலையை ராஜினுமா செய்து ஒரு பெரிய ஆயுர்வேத கலாசாலையில் பிரதம உபாத்தியாயர் வேலையைப்பெற்று மேல்நாட்டுப் பயிர்ச்சியையும், சரீரங்களின்மைப்பையும்பற்றி உபன்னியாச பூர்வமாய்ப் புகட்டிப் பாரதமாதாவின் குழந்தைக ளெவரும் சுகமாயிருக்க வேண்டித், தன்னுலியன்றமட்டும் பாடுபட்டுப் பலருங் கொண்டாடும்படிப் புகழுடன் வாழ்ந்தார்.

பெரியடாக்டரை வருத்த, முதலியார் ஆள் அனுப்பும் சமயம் வாவில்லை. அவர் வர நாலைந்து நாள் சென்றது. அதற்குள் முன்கட்டியிருந்த கட்டு அப்படியேயிருந்ததால் காயமும் ஆறிவிட்டது. ஜமீன்தாரும், ராமபட்டனைப்பற்றிப் புகழ்ந்து, அவரையவமதித்தது பிசகென்ற முதலியாருக்குச்சொன்னதால் அவரை வரவழைத்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். வீண் பணச்செலவைத் தடுத்து, ஆப்ரேஷனை விடுத்து ஆயுளையும் கொடுத்து, குடும்பத்தைக்காத்து ரக்ஷித்த ராமபட்டனை, முதலியாரின் தாய் புகழ்ந்து சம்மானித்தாள். அப்பொழுதவள், 'இச்சமயமேகி னெச்சமயம் வாய்க்குமோ? ஆயுர்வேத யூனனி வைத்தியங்களை யவமதித்ததாகத் தெரிந்தவுடன், இந்தியாமுழுவது மிதைப்பற்றிய உணர்ச்சி பரவியிருப்பது பலருமறிந்த விஷயம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டு மாதலால், இச்சமயத்தில் கூட்டங்கள் கூடி, மேல்நாட்டு வைத்தியத்தை ராஜாங்கத்தார் அபிமானித்து அதையே ஸ்தாபித்து உதவியளிப்பது போல் கவர்ன்மெண்டாரா லங்கீகரிக்கப்பட்டு உதவியளிக்கப்பட்ட ஆயுர்வேத யூனனி கலாசாலைகள் நாடெங்கு மேற்படுத்தப்படவேண்டுமென்றும் அவைகளில் படித்துப் பரீக்ஷைகளில்ஜயித்துச் சர்டிபிகேட்டு பெற்றவர்கள் மேல்நாட்டு டாக்டர்களைப் போல் அங்கீகரிக்கப்படவேண்டியவர்க ளென்றும் சட்ட மேற்படுத்தப் பிரயாசையெடுக்கவேண்டும். அதற்கு நீங்கள் பிரயாசைப்படவேண்டும்" என்றும் வேண்டினர்.

தேசாபிமானி.

---

சிதம்பரம் முனிசிபல் சேர்மனும், தாலுகா போர்ட் பிரசிடெண்டுமாகிய ம-ள-ள-ஸ்ரீ திவான் பஹதூர் சா. ரு. மு. ம. ராமசாமி செட்டியாரவர்கள்.—'போதினியில் வெளிப்படும் விஷயங்கள் எவருக்கும் நன்மைபயப்பனவாயும், யாரும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்கனவாயும், மதச்சண்டையில் புகாதனவாயும், எவரும் நன்மையென்று பாராட்டத்தக்கனவாயுமிருக்கின்றன. இதுபோன்றபத்திரிகைகள்தாம் தற்காலத்தற்கு அவசியம் வேண்டும். கவர்ன்மெண்ட அங்கத்தினரால், ஆதரிக்கப்படாது தள்ளாடும் சுதேச பாஷைகள் அபிவிருத்தியாவதற்கு இது போன்ற பத்திரிகைகள் வெளிவந்துலாவி நடைபெறுவது அவசியமாகும். ஆதலின் தமிழபிமானமுடையாரும் மற்றையதத்காகவும் இப்பத்திரிகை நன்கு நடைபெறும் விஷயத்தில் ஊக்கமெடுப்பார்களென்று நம்புகிறேன்.

# உளவறியும் முறைகள்

## ESPIONAGE SYSTEMS

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதாரென்
றாங் கனைவரையு மாராய்வ தொற்று. [குறள்

உலகந் தோன்றியது முதல், பல வகையான ஜாதியார்கள் நாகரீகத்திலும், ராஜாங்க பலத்திலும் முதிர்ந்து, வெவ்வேறு காலங்களில் உன்னத பதவி யடைந்து வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜாதியார்களை, வேறு நவீன ஜாதியார்கள் கிளம்பிப் போரில் வென்று, தங்கள் தங்கள் நாகரீகத்தை நிலைநாட்டி யிருந்திருக்கிறார்கள். இவ்வாறு நாகரீகத்தில் வேறுபட்ட அநேக ஜாதியார்கள் தங்கள் தங்கள் தேசமதம், பெண்டு பிள்ளை, கன்று காலி, வீடு வாசல் முதலியவைகளின் பாதுகாப்பின் பொருட்டுப் பெரும்போர் புரிந்துவந்திருப்பதுபோல், தற்காலத்தில் ஐரோப்பாவில் மஹாயுத்தம் ஒன்று நடந்து வருவதைக் கவனித்தால், ஒரு நவீன நாகரிகமும், நவீன ஜாதியும் பிறந்துகொண்டிருக்கிறது என்றூகிக்க வேண்டியிருக்கிறது. இவ்வண்ணம் நவீன ஜாதிகள் கிளம்புவது உலக இயற்கையே யாயினும், பல புராதன நாகரிகங்களும் அவைகளுக்கு அறிகுறியான சித்திரங்களும், புஸ்தக சாலைகளும், கட்டிடங்களும் அழிபட்டு வருவது பரிதபிக்கத் தக்கதே. என்றாலும், பொதுஜன சமூகமானது மேன்மேலும் அபிவிருத்தி யடைவதற்கு யுத்தங்களும் தகுந்த சாதனமென்றே பலராலும் கருதப்பட்டு வருகின்றது. ஆகவே, போரானது நெல்லிற்கு உமிபோன்ற ஒரு இன்றியமையாத தோஷம் ஆகின்றது.

நம்மிந்தியாவில் நாம் தினந்தோறும் பாராயணஞ் செய்துவரும் ராமாயணம், பாரதம் ஆகிய இரண்டு இதிஹாஸங்களும் மேற்கூறியவாறு உண்டாகிய போர்களின் சரித்திரங்களை யாகும். அவைகளிலே ராஜ தர்மமும் ராஜ தந்திரமும், ப்ரஜா தர்மமும், நீதிநெறியும், சைன்யங்களைப் போர் முனையில் செலுத்தி நடத்தும் முறைகளும், உளவறியும் வழிகளும், அஸ்திர சஸ்திரப் பிரயோகங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சீதையின் இருப்பிடத்தையும், அழகு, குணம் முதலியவற்றையும் சூர்ப்பனகை ராவணனுக்கு அறிவித்ததும், ராம லக்ஷ்மணர் மாரீசனாகிய பொன்மானைப் பின்றொடர்ந்து செல்ல, ராவணன் சந்நியாசி வேஷம் தரித்துச் சீதையை எடுத்துச் சென்றதும், பின்னர் சீதை அசோக வனத்தில் இருப்பதை ஹநுமான் தேடிக்கண்டுபிடித்து ஸ்ரீ ராமருக்குத் தெரிவித்ததும், உளவறிந்ததினாலேயாமென்க.

மேலும் பிரம்மாஸ்திரம், மோகனாஸ்திரம், நாகாஸ்திரம், ஆக்னேயாஸ்திரம், வருணாஸ்திரம், வாயு அஸ்திரம், விமானம் ஆகிய இவைகளின் விவரங்களும் இந்த இதிஹாஸங்களிலே காணலாகும். என்றாலும், நம்மவர்களில் பெரும்பாலரார், அவ்வித அஸ்திரங்களும் விமானங்களும் உண்மையல்லவென்றும், அவையெல்லாம் கவிகளின் கற்பனையேயென்றும் அபிப்பிராயங்கொண்டிருந்தாரென்பது நம்மில் பலர் அறிந்த விஷயமே. ஆயினும், தற்காலத்தில் ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கும் மஹா யுத்தத்தில் ராமாயண பாரதப் 'பொய்களெல்லாம் மெய்யாகக் கண்டோம்; அதி சூக்ஷ்மமான யந்திரங்களும் போர்க்கருவிகளும் கையாளப்பட்டுவருவதையும் கண்டோம்; வெகு தந்திரமாயும் தைரியமாயும் உளவாளிகள் வேஷம் மாறி, பகைவர் ஊர்களிலும் போர் முனைகளிலும் சுற்றித் திரிந்து, தங்கள் தங்கள் பகைவர்களின் பலத்தையும் பலஹீனத்தையும் கவனித்துச், சேனாதிபதிகளுக்கு ரகஸ்யமான சைகைகளினாலும், கம்பியில்லாத் தந்திக் கருவிகளினாலும், அறிவித்து வருவதையும் கண்டோம். ஆகவே இம்மஹா யுத்தம், மிகவும் கொடியதாகவும் பயங்கரமானதாகவும் ஆச்சரியத்தை யுண்டாக்குவதாகவும் இருக்கிறது. இந்த யுத்தத்திலே முக்கியமாக உளவறிதலே இருதிறத்தார்க்கும் சாதகபாதகங்களைச் செய்வதாயும் பொதுவாக ஒருசேனை போர்முனையில் முன்செல்ல இன்றியமையாததாயும் இருப்பதினால், உளவறியுமுறைகளையும், அவற்றிற்கு அநுகுணமான சேனையின் அமைப்பு முதலியவைகளையும் அறிவாளர் கவனித்தறியவேண்டியது அத்தியாவசியமாகும்.

உளவறிதல் ஓர் அரும்பெருங்கலையாகும். பொதுவாக, ஒருவனுக்கு உளவறியும் சக்தி பிறப்பிலேயே அமைந்திருக்க வேண்டுமாயினும், அத்தொழிற்கேயுரிய விசேஷப்பயிற்சியும் பல சாஸ்திர விஷயங்களின் ஞானமும் அவசியமாகின்றது. இயற்கையிலேயே வீரமும் துணிவும், யூகமும் யுக்தியும் உள்ளவர்களே இத்தொழிற்குரியராவார்கள். பெரிய ராஜாங்கங்களின் சேவைப்பட்ட நுண்ணிய அறிவையுடைய பல உளவாளிகளின் மத்தியிலேயே அவர்கள் கண்ணில் தென்படாமல் வேறொரு ராஜாங்க உளவாளி ரகஸ்யமாக வேலை செய்யவேண்டியிருப்பதினால், எதிர்பாராத இடையூறுகளும், தன் உபாயம் கைகூடிவரும் சமயத்தில் பிறர் அதற்கு விரோதமாக நடத்தலும், இன்ன சமயத்தில் இன்ன அபாயம் நேரிடுமென்று அறியக்கூடாததினால் மனதில் ஒருவிதமான சஞ்சலமும், இத்தொழிலில் எப்பொழுதும் பொருந்தியிருக்கின்றன. மேலும், ஒவ்வொரு உளவாளியும் தன் நடவடிக்கைகளைப் பிறர் கவனிக்காமலிருக்கும்படியாயும், ஒருவேளை கவனித்தாலும் சிறிதும் சந்தேகத்துக்கு இடங்கொடுக்காமலிருக்கும்படியாயும், எப்பொழுதும் சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருக்கிறது. இவ்விஷயங்களையுந் தவிர, ஏமாந்து ஒரு சிறு பிழை செய்தால் 'கரணம் தப்பினால் மரணம்' என்னும் பழமொழிக்கிணங்க சிறைச்சாலையோ, சிரச்சேதமோ நிச்சயமாய்க் கிடைக்கும் என்னும் பயமும் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும். என்றாலும், இத்தொழிலில் ஒவ்வொரு உளவாளிக்கும் மனப்பற்றும் மனக்கிளர்ச்சியும் ஒருவித இன்பமும் உண்டு. போர்வீரன் போர்முனையிலே தன் தேசத்திற்காகத் தன் தேகத்தை பகிரங்கமாக அர்ப்பணம் செய்கிறான்; அவனை எல்லாரும் புகழ்கிறார்கள். உளவாளியோ, சமாதான காலத்திலேயே தன் தேசத்திற்காகத் தான் அத்தொழிலை மேற்கொள்ளும்பொழுதே ரகஸ்யமாக ஆத்மபரித்யாகஞ் செய்துவிடுகிறான்; அவனை வேறு ராஜாங்கத்தார் கண்டால் தண்டிக்கிறார்கள். தன் ராஜாங்கத்தார்; பகைவரிடம் அகப்பட்டுக்கொண்டதினால் இகழ்கிறார்கள். ஆயினும் ஒவ்வொரு உளவாளி மனதிலும், "ஒரு போர்வீரனைக் காட்டிலும், தேசாபிமானத்துடன் தேசநன்மைக்காக நான் அதிகமாக உழைத்திருக்கிறேன்" என்னும் எண்ணமானது திருப்தியையும் ஆனந்தத்தையும் தருமென்பதில் சந்தேகமில்லை.

ஒற்றாடல் அதாவது உளவறிதல் இவ்வளவு பெருமைவாய்ந்ததாயினும் அது நீதி நெறியாகுமா? பிறருடைய குணகுணங்களையும் நடவடிக்கைகளையும் இரகஸ்யமாயும் திருட்டுத்தனமாயும் கவனித்து வருவதும், சொல்வன்மையினாலும் நயத்தினாலும் நம்மை நம்பி இரகசியங்களை வெளியிடுவோருக்கு "நம்பிக்கைத் துரோகம்" செய்வதும், வேஷம் மாறி உள்ளும் புறம்பும் வெவ்வேறாய்ப் பிறர்களை மயக்குவதும் குற்றமன்றோ? ஒற்றர்களின் உட்கருத்து சுயநயமின்றித் தேசநன்மையாதலினாலும், ஒற்றாடல் ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் இன்றியமையா அங்கமாதலினாலும் நீதிபிறழாத தொழிலேயாகுமென்க. தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் திருக்குறள் என்னும் தம் நீதிநூலில் ஒற்றாடல் விஷயமாக 59-வது அதிகாரத்தில் பத்துக் குறள்பாக்கள் பாடியிருக்கிறார். இங்லீஷ், பிரெஞ்ச், ருஷ்ய, ஜெர்மன் முதலான பல ஐரோப்பிய பாஷைகளில் இது மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே இந்நூலின் பெருமைக்கு அறிகுறியாகும். ஒற்றாடல் விஷயமாகத் திருவள்ளுவர் கூறுவது சர்வ சம்மதமாகும். அவர் கருத்தையே தழுவி, பல ராஜாங்கத்தார்கள் உளவறியு மிலாகா அமைத்து, நடவடிக்கை நடத்திவருவது அதிசயிக்கத்தக்கது. அவர் பாக்கள் பின்வருமாறு:—

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். (1)

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். (2)

ஒற்றினா லொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். (3)

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று. (4)

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று (5)

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. (6)

மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று. (7)

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல். (8)

ஒற்றூற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். (9)

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை. (10)

மேற்கூறிய பாக்களின் கருத்தாவது: ஒற்றுடனும், பல நூல்கள் கற்றுமுதிர்ந்த அறிவும் ஓரரசனுக்கு இரண்டுகண்களாகும். தன்னுடைய கண் செல்லமாட்டாத இடமெல்லாஞ் சென்று, அங்கே நிகழ்ந்தனவற்றை ஒற்றர் உணர்த்தலாலும், தன்னுடைய அறிவு செல்லமாட்டாத விஷயங்களையெல்லாம் படிப்பதினுல் நூலானது உணர்த்தலாலும், அரசனுக்கு ஒற்று ஊனக்கண்ணும், நூல் ஞானக்கண்ணும் ஆகின்றன. வேந்தன் தொழிலாவது ஒவ்வொருவருடைய நோக்கங்களையும் செய்கைகளையும் விரைவில் அறிந்துகொள்வதே. ஒற்றர்களின் உதவியால் விஷயங்களின் உண்மையை அறியவல்லவனல்லாத அரசனுக்கு எப்பொழுதும் வெற்றிகிடைப்பதரிது. ரகஸ்யங்களை ஆய்ந்தறிய வல்லவர்களாயும், அறிந்த விஷயங்களில் சந்தேகம் சிறிதுமில்லாதவர்களாயும், எவ்வித இடையூறுகளுக்கும் பின்வாங்காமல் யார் என்ன செய்தபோதிலும்சோர்வின்றி அஞ்சாத நெஞ்சர்களாய் ஒருவரும் சந்தேகிக்கக் கூடாதபடி சமயத்துக் கேற்ற, சந்நியாசி முதலாயினோர் உருவங்களைத் தாங்கித், தங்கள் ரகஸ்யங்களை வெளிவிடாது அரசனுடைய அதிகாரிகள், சிநேகிதர்கள், சுற்றத்தார்கள், பகைவர்கள் ஆகிய எல்லோரையும் அளந்து அறியும் ஆற்றலுள்ளவர்களாயுமிருப்பவர்களே ஒற்றர்கள் ஆவார்கள். சிலசமயங்களில் ஓர் ஒற்றன் அறிந்துவந்த பொருளை, மற்றோர் ஒற்றன் கூறும் பொருளோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை யறிந்துகொள்ளல் வேண்டும். ஓர் ஒற்றன் மற்றோ ரொற்றனை யறியாத வண்ணம் தந்திரமாக இரண்டு மூன்று ஒற்றர்களை யேவுவதினுல் நிச்சயிக்கப்பட்ட விஷயமே உண்மையென்றறிதல் வேண்டும். அரசன் தனக்குப் பேருபகாரம் செய்த ஒற்றனுக்குப் பகிரங்கமாக வெகுமதி முதலிய சிறப்புகளைச் செய்தல், ‘இவன் ஒற்றன்’ என்னும் ரகஸ்யத்தை வெளிப்படுத்தியதாகும்.

மேற்கூறிய விஷயங்களினுலே உளவறியு மிலாகா ஒன்று, ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் பலத்தைக் கொடுத்து, பொது நன்மையையும் பாதுகாக்கும் திறத்தது என்பது நன்கு விளங்கும். இவ்விஷயத்தை உணர்ந்தே முற்காலத்து இந்திய அரசர்கள் இரவில் மாறுவேஷம் பூண்டு நகர சோதனை செய்து தம் குடிகளின் குற்றங் குறைகளையும் ராஜாங்க அதிகாரிகளின் கொடுமைகளையும் கண்டுபிடித்து, அவைகளை நீக்கிவந்திருக்கிறுர்கள். காலிப் ஹாரோன் ஆல் ராஸ்ச்சிட் என்னும் மகம்மதிய அரசரும் இவ்வாறு நகர சோதனை செய்துவந்திருப்பதாக நாம் அரேபிய இரவுக் கதைகளிலிருந்து நன்றாக அறியலாம். ஜெர்மனி, ரஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் உளவறிவதற் கென்றே ஒரு தனி ராஜாங்க இலாகா ஏற்படுத்தியிருக்கிறுர்கள். இந்தியாவிலும், ‘ஸி. ஐ. டி’ (C. I. D) என்று சொல்லப்படும் போலீஸ் இலாகா, குற்றங்களையும் இரகசியமான நடவடிக்கைகளையும் கண்டுபிடிப்பதற்கென்றே ஏற்படுத்தப் பட்டதாகும். பொதுவாக இந்த இலாகாவானது, உள் நாட்டு வெளி நாட்டு விஷயங்களைக்கவனிப்பதற்காகப் பல ராஜாங்கங்களில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் ஜெர்மானிய உளவறியுமிலாகாவே எல்லாவற்றிலும் உயர்நிலையடைந்திருக்கிறதென்றும், அதன் உதவியாலேயே யுத்த ஆரம்பத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்குள்ளேயே பெல்ஜிய தேசத்தில் ஏறக்குறைய முக்கால் பங்குக்கு மேலாக ஜெர்மனி சுவாதீனப்படுத்திக் கொள்ள முடிந்ததென்றும், நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறுர்கள். இவ்விஷயம் உண்மையென்று நினைக்க இடமிருக்கிறது. ஏனெனில் திருவள்ளுவர் கருத்தின்படி, ஒற்றுடலைத் தன் கண்போல பாவித்து, சிநேகிதர், பகைவர் என்னும் வித்தியாசமின்றி யாவரையும் உளவாளிகளைக் கொண்டு கவனித்துப், பணச்செலவைக் கரு

தாது இரகசியமாகப் பல வழிகளில் உளவாளிகளுக்குச் சம்பளம், வெகுமதி முதலியன கொடுத்து, எல்லா தேசங்களின் பலக்குறைவையும் அறிந்துகொண்டு இந்த மஹாயுத்தத்தில் ஜெர்மனி இறங்கி, இரண்டு வருஷ காலமாக ருஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய மகத்தான ராஜாங்கங்களோடு போர்புரிந்து வருவதை நாம் யோசித்தால், உளவறிதலின் முக்கியம் தெற்றென விளங்கும்.

இனி, உளவாளிகளில் உள்ள பல வித்தியாஸங்கள், அவர்களுக்கு இருக்கவேண்டிய சாமர்த்தியம், கற்பிக்கவேண்டிய விசேஷப் பயிற்சி, சண்டைக் காலங்களிலும் சமாதான காலங்களிலும் அவர்கள் செய்யும் வேலைகள், ஒரு தேசத்தின் பூகோளம், பூஸாரம், ஸ்தல விவரம், ஜனசமூகம் இவைகளைப் பற்றி முக்கிய சமாசாரங்கள் சேகரித்து அவைகளை ஒருவருக்குந் தெரியாமல் ஒளித்து வைத்து, பின் தங்கள் ராஜாங்கங்களுக்கு அறிவிக்கும் வழிகள், உளவாளிகள் வேலையாட்களையும் தொழிலாளிகளையும் வேலை நிறுத்தும்படிச் செய்தல் ஆகிய பல விஷயங்களைப் பற்றிப் பொதுவாகவும், அவைகளில் ஜெர்மனியின் உளவு முறைகளைப்பற்றியும் சேனையின் அமைப்பைப் பற்றியும் சிறிது விசேஷமாகவும் கவனிப்போம்.

சமாதானகாலங்களில் பிறதேசங்களிலே உளவாளிகள் செய்யும் வேலைகளை நன்றுயறிவதற்கு, இம் மஹா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன், ஐரோப்பாவின் நிலைமையை அறியவேண்டியது அவசியமாகிறது.

---

## "விவேக போதினி"

எமது பத்திரிகையைப்பற்றி சென்னை பிரஸிடேன்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதய்யரவர்கள் எழுதுவது:—"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

# பூமி

## THE EARTH

சூர்யனைச் சுற்றிவரும் கிருஹங்களில் நாம் வசிக்கும் பூமியும் ஒன்று என்று சொன்னோம். இது உருண்டை வடிவமாயிருக்கிறதென்றும், ஆனால் இரண்டு துருவங்களிலும் மாத்திரம் கொஞ்சம் தட்டையாயிருக்கிறதென்றும் நமக்குத் தெரியும். இது ஒரு பெரிய பந்து. சராசரிக்கு, நேர் குறுக்களவில் 7918 மைல் உள்ளது; அதாவது சுற்றளவில் சுமார் 24,900 மைல் உள்ளது. பூமியின் மேற்பறப்பில் அநேக மலைகளும், குன்றுகளும். பள்ளத்தாக்குகளும், ஏரிகளும், கடல்களும் இருக்கின்றன. பூமியை ஒன்றும் தாங்கிக்கொண்டில்லை. மற்ற கிருஹங்களைப்போல் இது ஆகாயத்தில் தாங்குதலில்லாமல் மிதக்கிறது. வானத்தில் காணப்படும் சூர்ய சந்திரர்களும், நட்சத்திரங்களும் இம்மாதிரியேதான் மிதக்கின்றன. ஒன்றுக்கொன்றுள்ள ஆகர்ஷண சக்தியால் இவைகள் அந்தந்த இடங்களை விட்டுப் பெயராமலிருக்கின்றன. இந்த சக்தியைப்பற்றி நாம் இங்கு விசாரிப்பது பொருத்தமாகாது. ஆனால் இம்மாதிரியான ஒரு சக்தியிருக்கிறதென்றும், இதன் குணத்தால் இந்த வான வஸ்துக்கள் இடம் பெயராமலிருக்கின்றன வென்றும் நாம் அறிந்துக் கொள்ளுவோம்.

சூர்ய சந்திரர்களும், நட்சத்திரங்களும் தினம் கிழக்குத் திசையில் உதித்து மேற்கில் அஸ்தமிப்பதை நாம் கவனித்திருக்கிறோம். இப்படித் தெரிவதற்கு அவைகள் கிழக்கிலிருந்து மேற்குக்கு நகரவேண்டும். அல்லது, பூமி மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக நகரவேண்டும். நாம் புகைவண்டியில் உட்கார்ந்து போகும்போது, பாதையின் இரு பக்கங்களிலுமுள்ள செடிகள் நமக்கு எதிர்ப்பக்கமாக போவனபோல் காணப்படுகின்றன. ஆனால் அந்தச் செடிகள் நகரவில்லையென்றும், நாம் வேகமாய் வண்டியில் போவதால் அவைகள் எதிர்ப்பக்கமாக செல்லுவன போல் காணப்படுகின்றன வென்றும் நமக்குத் தெரியும். இதுபோலவே

சூர்யன் நகர்வதுபோல் காணப்பட்டபோதிலும், உண்மையில் அது நகர்வதேயில்லை. நட்சத்திரங்களும் நகர்வதில்லை. பூமி வேகமாக மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக நகரவேண்டும். ஏனென்ருல், சூர்யன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலிய எல்லாம் பூமியைச் சுற்றி வருவனவாயிருந்தால், பல தூரங்களிலுள்ள இவைகளெல்லாம் பூமியைத் தினத்திற்கொருதரம் சுற்றி வரவேண்டும். அநேக கோடி மைல்கள் தூரத்திலுள்ள இவ்வஸ்துக்கள் பூமியைச் சுற்றிவரும் விதிகள் எவ்வளவு தூரமுள்ளவைகளா யிருக்கவேண்டும்? இப்பெரும் விதிகளில் இவை சுமார் 24 மணிக்கு ஒருதரம் சுற்றி வருவனவாயிருந்தால் இவைகளின் வேகம் அளவற்றதாயிருக்கவேண்டும்! இந்த அசாத்திய வேகத்தால் நமது கண்ணுக்கே இவை தெரியமாட்டா. ஆகையால் பூமிதான் நகர்கிறதென்றும், சூர்யன் முதலியவை பூமியைச் சுற்றவில்லையென்றும் தெரிகிறது.

இப்படி பூமி நகர்ந்துகொண்டே யிருந்தால், அதே சூர்யனும், அதே நட்சத்திரங்களும் நமக்கு எப்படி மறுபடியும் மறுபடியும் காணப்படும்? ஒரு பம்பரம் சுற்றுவதுபோல், இது தன்னைத்தானே சுற்றவேண்டும். இது தன்னைத் தானே சுற்றுவதால் தான் நாம் தினந்தோறும் அதே சூர்யனையும், அதே நட்சத்திரங்களையும் பார்க்கிருேம். சூர்ய உதயத்திலிருந்தும், அஸ்தமனத்திலிருந்தும் உண்டாகும் பகல், இரவுகளுக்கு இப்படி பூமி சுற்றுவதே காரணமாகும். இப்படி தன்னைத்தானே ஒருதரம் சுற்ற 23 மணி 56 நிமிஷம் பிடிக்கிறது. இந்தக் காலம்தான் ஒருநாள்.

நாம் மற்ருெரு விஷயம் கவனிக்கவேண்டும். எல்லாத் தினங்களிலும் சாயங்காலவேளையில் அதே நட்சத்திரங்கள் உதிக்கக் காண்கிருேமா? இல்லை. கோடை காலத்தில் சாயங்காலம் உதித்து, நடு நிசியில் தலைக்கு நேராகக் காணப்படும் நட்சத்திரங்கள் மழைகாலத்தில் சாயங்காலம் உதிக்கவாவது, நடுநிசியில் தலைக்கு நேராகவாவது காணப்படவில்லை. ஆகையால் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நட்சத்திரங்கள் சாயங்காலத்தில் உதிக்கக் காண்கிருேம். அல்லாமலும், நட்சத்திரங்களை விடாமல் உதிக்கும்போதாவது, நடுநிசியில் தலைக்கு நேராக வரும்போதாவது கவனித்தால், முதல் காணப்பட்ட நட்சத்திரங்கள் இரவுகளின் அதே நேரங்களில் வரவர மேற்குப் பக்கமாக ஒதுங்கிக் காணப்படுகின்றன. ஆனால் வருஷத்திற்கு ஒருதரம் அதே நட்சத்திரங்கள் அதே காலத்தில் மறுபடி உதிக்கவும், அதேகாலத்தில் தலைக்குநேராக வரவும் காணப்படும். அதாவது, ஒரு இரவில் சரியாகப் பத்து மணிக்கு நமது தலைக்கு நேராக ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரம் மறுநாள் கொஞ்சம் மேற்குப் பக்கம் ஒதுங்கியிருக்கும். 10, 15-நாட்கள்கழித்துப் பார்த்தால் இப்படி ஒதுங்கியிருப்பது நன்ருய்த் தெரியும். இப்படி நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுங்குகிறது. இந்த நட்சத்திரத்தை மறுபடி அதே பத்துமணிக்குத் தலைநேராக ஆகாயத்தில் காண ஒரு வருஷம் ஆகிறது.

நமது பூமிக்குத் தன்னைத்தானே சுற்றுவதைத் தவிர, வேறுவிதமாய்ச் செல்லுதலொன்றும் இல்லாவிட்டால், ஒவ்வொரு தினமும் அதே காலத்தில் அதே நட்சத்திரங்களை அதேயிடத்தில் ஆகாயத்தில் நாம் காணவேண்டும். ஆகையால் பூமி மேற்கிலிருந்துக் கிழக்குப் பக்கமாக நகர்ந்து கொண்டேயிருக்கவேண்டும். இப்படிநகர்ந்து கொண்டே, தானிருந்த இடங்களைவிட்டுப் போகாமல், வருஷத்திற்கு ஒருதரம் அவ்விடங்களுக்குத் திரும்பிவர வேண்டுமென்றும் தெரிகிறது. சூர்யனும், நட்சத்திரங்களும் இதைச் சுற்றவில்லையென்று சொன்னேம். ஆகையால் இது சூர்யனையும், நட்சத்திரங்களையும் சுற்றிவரவேண்டும். ஆனால் இது சூர்யனை மாத்திரந்தான் சுற்றி வருகிறது. இது ஏன் நட்சத்திரங்களைச் சுற்றிவர முடியாது என்று நட்சத்திரங்களைப்பற்றிப் படிக்கும்போது நன்கு விளங்கும். இப்படி பூமி ஒருதரம் சூர்யனைச் சுற்றிவரப் பிடிக்குங்காலத்தையே ஒரு வருஷம் என்று சொல்லுகிருேம். இது சுற்றும் வழியில் ஒரு செகண்டுக்குச் சுமார் $18\frac{1}{2}$ மைல் தூரம் போகிறது. இந்த வேகத்தை நாம் உணராமலிருப்பதற்கு அநேக காரணங்களுண்டு.

இக்காரணங்களைப்பற்றி இங்கு பேசுவது சரியாகாது.

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டே சூர்யனைச் சுற்றிவருகிறது. இப்படிச் சுற்றுவதற்குப் பூமியின் இரு துருவங்களையும் சேர்க்கும்படியான மத்தியக்கோடு, மைய ஆணியாயிருக்கிறது. சூர்யனைச் சுற்றிவரும் பாதைக்கு இந்தக் கோடு நேர் செங்குத்தாயிருக்கவில்லை. அப்படியிருந்தால், பூமி சூர்யனைச் சுற்றும்போது சரிபாதி கோளம் சூர்யனுக்கு நேரிலும், மற்றொரு பாதிகோளம் எதிரான மறுபக்கத்திலு மிருக்கும் எந்தப் பாகம் சூர்யனுக்கு நேராயிருக்கிறதோ, அதற்குப் பகலும், மறுபாகத்திற்கு இரவுமாயிருக்கும். பூமி தன்னைத்தானே ஒருதரம் சுற்ற ஒரு நாளாகிறது. ஆகையால் பூமியின் ஒவ்வொரு இடமும் சரிபாதி நாள் சூர்யனுக்கு நேரிலும், சரிபாதிநாள் அதற்கு எதிரான மறுபக்கத்திலு மிருக்கும். அதாவது ஒருநாளில் சரிபாதி பகலும், சரிபாதி இரவுமாகக் காணப்படும். இப்பொழுது நமக்கு ஒவ்வொரு தினத்திலும் பகலும் இரவும் சரியாயிருப்பதில்லை. சில காலங்களில் பகல் அதிகமாகவும் இரவு குறைச்சலாகவும், சில காலங்களில் பகல் குறைச்சலாகவும் இரவு அதிகமாகவும் இருக்கிறது. இதைக் கவனிக்காதவர்களில்லை. நமக்குக் கோடைகாலத்தில் அல்லது வெயிற்காலத்தில் பகல் பொழுது அதிகமாகவும், மழைகாலத்தில் இராப்பொழுது அதிகமாகவும் இருக்கிறது. அதாவது, மே, ஜூன், ஜூலை மாதங்களில் பகல்பொழுது அதிகமாகவும், நவம்பர், டிஸம்பர், ஜனவரி மாதங்களில் இராப்பொழுது அதிகமாகவு மிருக்கிறது. ஆனல் எக்காலத்திலும் பகலும் இரவும் சேர்ந்த ஒரு நாளின் காலம் ஒன்றேதான்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? பூமிசுற்றுதலுக்கு மையஆணியாகிய அதன் இரு துருவங்களையும் சேர்க்கும் கோளத்தின் மத்தியகோடு, பூமி சூர்யனைச் சுற்றிவரும் பாதையின் சமமட்டத்திற்கு (The plane of the orbit) நேர் செங்குத்தாயில்லையென்றுதெரியவருகிறது. அதாவது, அந்தப் பாதையின் மட்டத்திற்கு இந்தக் கோடு கொஞ்சம் சாய்ந்திருக்கிறது சூர்யனுக்குப் பதிலாக ஒரு விளக்கையும், பூமிக்குப் பதிலாக ஒரு பந்தையாவது, மரத்தினல் செய்யப்பட்ட ஒரு பூகோளத்தையாவது வைத்துக்கொண்டு சுற்றிப் பார்த்தால், இவ்விஷயங்களெல்லாம் நமக்கு நன்ருய்த்தெரியும்! இந்த மத்தியக் கோடு சாய்ந்திருந்தபோதிலும், பூமி சூர்யனைச் சுற்றிவரும் பாதையின் எந்தப் பாகத்திலிருந்த போதிலும், இக்கோடு ஒரே ஸ்திதியி லிருக்கிறது. அதாவது, பல விடங்களில் காணப்படும் இந்தக்கோடு ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவே காணப்படுகிறது. ஆகையால், இப்படி இந்தக் கோடு சாய்ந்திருப்பதால் ஒரு துருவம் சூர்யனுக்கு நேராகச் சாய்ந்திருந்தால், மற்றொரு துருவம் அதற்கு எதிரான மறுபக்கமாகச் சாய்ந்திருக்கும். சில மாதங்களில், வட துருவம் சூர்யனுக்கு நேராயிருக்கும். அப்பொழுது, தென் துருவம் எதிரான மறுபக்கத்தி லிருக்கும். இந்த மாதங்களில் பூமியின் தென் வடவில் மத்திய பாகமாகிய நிரட்சரரேகைக்கும் வடதுருவத்திற்கும் இடையி லுள்ள இடங்களுக் கெல்லாம், ஒரு தினத்தில் பாதி காலத்திற்கு மேலே சூர்யன் தென்படுமல்லவா? நிரட்சரரேகையி லிருந்து வடக்கே போகப்போக இப்படிச் சூர்யன் தென்படும் காலம் அதிகமாகுமல்லவா? நமக்கு சூர்யன் தென்படும் காலமே பகற்பொழுதாகையால், அவ்விடங்களுக்குப் பகற்பொழுது 12 மணிநேரத்திற்கு அதிகமாயிருக்கும். அதாவது, அவ்விடங்களில் இராப்பொழுதைக் காட்டிலும், பகல் அதிகம். இக்காலங்களில், நிரட்சரரேகைக்குத் தென்பாகத்திலுள்ள இடங்களுக்கெல்லாம் பகலைக் காட்டிலும் இரவு அதிகம். இப்பொழுது வட துருவத்திற்குச் சமீபத்தில் போகப்போக ஒரு தினத்தின் பகற்பொழுதும் வரவர அதிகரிக்கும். வடதுருவத்திலேயே ஒரு தினம் முழுவதும் பகலாயிருக்கும், இரவே யிராது. இம்மாதிரியே தென் துருவத்திற்குச் சமீபத்திலுள்ள இடங்களுக்கு இராப்பொழுது மிகவும் அதிகமாயிருக்கும். தென் துருவத்தில் ஒரு தினம் முழுவதும் இரவாகவே யிருக்கும்.

(இன்னும் வரும்.)

# உலக ஸம்பவங்கள்

# How the World moves.

யுத்தக்காற்று ஒரேமாதிரியாகவேதான் வீசிக்கொண்டிருக்கிறது. மேல் அரங்கத்தில், நிலை முன்போலவேதான் இருக்கிறது. வேர்டனுக்கு இருபுறத்திலும் இருபுறத்தார் சேனையும் நெருப்புமழை பெய்துகொண்டேயிருக்கிறது. ஜர்மானியர்கள் முன் மந்தமாக இருந்ததைவிட அதிக மும்முரமாகப் போரிடுவதாகத் தெரியவருகிறது. இது அவர்களது கடைசி முறைப் பிரயத்தனமெனக் கருதப்படும். வரவர அவர் பலம் குறைந்து வருவது இதனாலேயே தெரியவரும். முதலில் ஜர்மானியர்க்குச் சிறிது ஜயம் வரும்போலிருந்தது. ஆயினும் நமது துருப்புகள் தமக்கு ஜெனரல் பெடேய் என்னும் சேனைத்தலைவர் தமது போர்வீரருடன் உதவிக்கு வரும்வரை மிகச் சிறப்புடன் தாக்கியது கொண்டாடத்தக்கது. அவ்வாறு செய்ததால் நமது பிரெஞ்ச் சேனைக்குப் பெரும் ஜயத்திற்கிடமானது. இதனால் பெருமை தாழ்ந்த ஜர்மானியர் மேலும் தமது காரியங்களை மும்முரமாக நடத்த வாரம்பித்தனர். என்ன நஷ்டமடைந்தபோதிலும், வெர்டன் இடத்தில் தமது . வீரங்காட்ட அவர் நினைத்திருக்கின்றனர் போலும்! இதற்கு அவரது குறைந்த வீரமே காரணமாகும். அவ்வாறு செய்வதே மிக நல்லது! ஜர்மானிய ராணுவப் பேய் யமனுக்கிரையாக அதுவே நல்லவழி.

நிற்க, தென் அரங்கத்தில் இடலியின் வடப்பிராந்தியத்தில் ஆஸ்டிரியர்கள் வெகுகடுமையாகப் போரிடுவதாகத் தெரியவருகிறது. இதற்கென்றே கலீஷ்யா, பால்கன் பிராந்தியங்கள் இவற்றிலிருந்த துருப்பையும் இவ்வரங்கத்திற்கு அவர் கொண்டுவந்து சிறிது ஜயமடைந்தனரென்றே சொல்லவேண்டும். இடாலியர்கள் ராணுவ காரணங்களை முன்னிட்டே தாம் பின்வாங்கினர். இடலிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் யுத்த மாரம்பித்த கால முதல், இடலியின் வடபாகத்து இயற்கை அமைப்பு அதற்குப் பெருந்தடையாக இருந்தது; முக்கியமாக இவ்வாறு டிரேண்டினோவென்னுமிடத்தில்தான் விளங்கியது. மேலும் அப்பாகங்கள் மலையடர்ந்தவைகளானபடியால் இடாலியர்க்கு வடக்கில் முன்னிட முடியாது. அவர்கள் கிழக்குப் பார்சவமாகத்தான் முன்னிட முடியும். இஸ்ஸான்ஸோ பாகத்தை அவர் கடந்துவிட்டால், பின் சிறிதும் தடையில்லாமல் பகைவரது தலைநகராகிய வியன்னாவின்மேல் அவர் படையெடுக்கலாம். அவ்வாறு செய்வதற்கும், தமது பார்ச்வ சேனைகள் ட்ரேன்ட் என்னுமிடத்தில் தளர்ந்து, பகைவரது முன்னிடுவதால் படுத்து, இஸ்ஸான்ஸோவிலிருக்கும் சேனையிலிருந்து பிரிக்கப்படாததற்காகவென்றே இடாலியர் பின்வாங்கியது. இல்லாவிடில் வெனிஸ் நகரத்தின்மேல், பகைவர் படையெடுக்க இட்முண்டாயிருக்கும்.

கீழ் அரங்கத்தின் ஸமாசாரம் அதிகமாகத் தெரியவில்லை. பல்கேரியா நல்ல ஸமயத்திற்காகச் சகுனம் பார்த்துக்கொண்டிருக்கிறது. நமது நேசத்துருப்புகள் கிரீஸில் தமது அரண்களைப் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. கிரீஸ் நாட்டு நிலையும் அப்படியேதான் விளங்குகிறது.

ஆசியத் துருக்கியில், மெஸபொடோமியாவில் குட் எல்-அமாரா என்னுமிடத்தில் ஜெனரல் டௌன்ஸென்ட் கீழ் இருந்த நமது சேனை, துருக்கியரால் முற்றுகையிடப்பட்டு,

நான்கைந்துமாதம் வரை தமது நிலையைக் காத்து,உணவாதிபோஷணைச்சாமான்கள் இன்மையாகத் தாங்கமுடியாது சரணடைந்தது. இது நமது சேனைக்குப் பெரும் விபத்தேனும், அதி விரச்செயல். அன்னஹாரமற்று 4 மாதத்திற்கு மேல்வரை தாக்குப்பிடித்த அவர்களது கஷ்டங்களும், அவர் விரத்துடன் அவற்றைக் கவனியாது, மேல்பாகத்திலிருந்து உதவிக்கு வரும் என்று காத்திருந்த ருஷ்யசேனை, துருக்கியரால் தடுக்கப்பட்டமையுமே குட் விழுந்ததற்குப் பெருங் காரணங்களாகும். கிட்டத்தட்ட 9000 பேர் நமது வீரர்கள் பகைவரிடம் சிக்கிக்கொண்டனர். டௌன்ஸெண்டின் வீரத்தின் பெருமையைக்கண்ட துருக்கிய சேனாதிபதியும் அவரது கத்தி முதலிய ராணுவ கௌரவங்களை அவ்வாறே இருக்கச் செய்தனரென்பது யாவர்க்குஞ் சந்தோஷமூட்டும். குட்டிலிருந்து, டௌன்ஸெண்ட் இஷ்டத்திற்கு மாறாக, பாக்டாட் நகர்மேல் படையெடுத்து நடக்க ஆரம்பித்தது முதல் நமது இந்தியஸேனைக்குச் சுகமில்லை யென்றே சொல்லலாம். ஆனால் குட் விழுந்தது அப்பரிதாபக் கதையின் முடிவேயாகும். அது நம்மவர்க்கு ஆராத்துன்பமுண்டாக்கக் கூடியதாயினும், ராணுவ விஷயத்தை நாடுமிடத்து, கவனிக்கத் தக்க விஷயமே அன்று.

மற்று, மேற்குப் பிராந்தியத்தில் ருஷ்யர்கள் துருக்கியின் விலாவை யொடித்துப் புடைத்து, யுத்தகளத்திலிருந்து துலைத்து விடவே பார்க்கின்றனர் போலும்! முதல் ரஷ்யசேனை காகஸஸ் மலையைத் தாண்டி பெருந்துருக்கிச் சேனைகளை நொறுக்கியதும், துருக்கி நாடு முழுதுங் குழப்ப மிருப்பதாகச் சொல்லப்படுவதும், துருக்கியில் நமது நேசத்துருப்புகளிடம் வாஞ்சையுள்ள இரு பிரிவினர்கள் இருத்தலுமே இதற்காதாரங்கள் எனச்சொல்லலாம். முன், டார்டனல்ஸ் ஸந்தியிலிருந்த ஆங்கிலப் படையின் தடையைத் தடுத்தால், போக்குவரவும், உணவுச் சாமான்களும் துருக்கியிலிருந்து தனக்குக் கிடைக்குமென ஜர்மனி வேலைசெய்தது. அவ்வாறு முற்றும் அதற்குப் பயனுண்டாகவில்லை. இப்பொழுது முன்போல் நமது நேசத்துருப்புகள், துருக்கி தமக்குக் கெடுதி செய்யமுடியுமென்று நம்புகின்றனர் இல்லை. ட்ரபிஜாண்ட் எர்ஜிங்காம் என்னுமிடத்திற்கிடையே ரஷ்ய சேனை துருக்கிச் சைன்யங்களைத் தேய்த்து வருகிறது. இருந்தாற் போலிருந்து மிகுவேகத்துடன் பரவியதால், ரஷ்ய சேனையை எதிர்த்துச் சமாளிக்கும்படியான ஆற்றல்களைத் துருக்கியால் செய்ய முடியாதாகியது. ரஷ்ய சேனை துருக்கிநாட்டு மலைகளைத் தாண்டி, பெரிய ஆறுகளையுங் கடந்ததல்லாமல் அவைகளைத் தமக்குத் தக்க விதம் உபயோகமாகும்படி அரணிட்டு பலப்படுத்துகின்றது. ட்ரபிஜாண்டிலிருந்த சேனை எர்ஜிங்காம் பக்கம் சென்று மாமஹ்டம் என்னும் பட்டணத்தைக் கைப்பற்றியது. பாக்டாட் மேல்செல்லும் சேனை காஸ்ர்-இ-ஷரீன் என்னும் இடத்தைக் கவர்ந்தது. மோஸல் பக்கமாய்ப் புறப்பட்ட சேனைரேவாண்டூஜ் என்னு நகரைக் கவர்ந்து பொருள்களையெல்லாம் தமதாக்கியது. மோஸல் விழுந்தால் துருக்கிக்குப் பெருங் கஷ்டம். அது துருக்கித் தலைநகராகிய கான்ஸ்டாண்டிநோபிலுக்கும் பாக்டாட்டுக்கும் இடையே ரயில்வே மார்க்கத்திலிருக்கிறது. டிரபிஜாண்ட் பக்கத்திலோ துருக்கியர் கோர்ஸுன் என்னுமிடம் வரைப் பின்வாங்கி விட்டதாகத் தெரிகிறது. மெஸபடோமியாவிலும் டைக்ரிஸ் நதிக்கரையில் இருக்கும் பேதா-இ-எஸ்ஸா என்னும் தலத்தைவிட்டுத் துருக்கியர் அகன்றுவிட்டதாகத் தெரியவருகிறது. துஜைலா காவற்கோட்டையும் நம்மிந்திய சேனையாற் கவரப் பட்டது. ஸன்னையாட் இடத்தை விட்டுத் துருக்கியர் அகலவில்லை யானாலும், ரஷ்ய சேனை இந்திய சேனைக் குதவியாக இம்மாத முடிவில் வந்தது இனி துருக்கிக்குப் பெரும் பீடைதான்

இச்சண்டை நடக்குங்காலத்து விளங்கிய ஆங்கில மனவமைதியைச் சற்றுச் சலிக்கச் செய்யுமாறு அசப்பியமாக அயர்லாந்தில் நடந்த குழப்பம் விசனிக்கத்தக்கது. தென்னாப்பிரிகாவிலும் இந்தியாவிலும் காட்டிய ராஜவிச்வாஸத்தை அச்செயல் துலையில் கனக்கச் செய்யுமன்றோ? முட்டாள்தனமாக அக்குழப்பத்திற் சம்பந்தப்பட்டவர் டப்

ளினில் குழப்பமிட்டு ஜனச்சேதத்தைச் செய்தனர். சிலரது செயலுக்கு அந்நாடு வருந்தும்படி நேர்ந்தது மஹாபாபமல்லவா? அயர்லாந்திலும் தென் ஆப்ரிகாவிலும் குழப்பமுண்டாகுமென்றே ஜர்மனி, யுத்த முதலிலிருந்து எதிர்பார்த்தது. அவ்வாறு அந்நாட்டு ஜனங்களில் சிலர் நடந்துகொண்டது பகைவரது தூண்டுகோலினால்தான். ஸர் ராபர்ட் கேஸ்மாண்ட் என்பவரே இக்குழப்பத்திற்கு முதலாளி. பகைவரிடமிருந்து உதவி சம்பாதித்து யுத்த ஸாமான்களையும் சேகரிக்க யத்தனஞ் செய்தார். ஆனால் அவர் வந்த ஜர்மனியக் கப்பல் நமது கப்பல்களால் பின் தொடரப்பட்டதனால், தானாகவே தகர்ந்து வெடித்து விட்டது. கேஸ்மாண்ட் இப்பொழுது கைதியாக இருக்கிறார்; அவரைப் பற்றி ராஜத்ரோக கேஸ் நடைபெற்று வருகிறது.

⁂

யுனைடட் ஸ்டேட்ஸ் பிரெஸிடெண்ட் வில்ஸனுடைய கடிதத்திற்கின்னும் ஜர்மனி பதில் எழுதவில்லை. ஜர்மனி, ஸமாதானத்தைப் பற்றிப் பேசும்படியாக அவரை வேண்டுவதாக வதந்தி வருகிறது. ஜர்மானிய சக்ரவர்த்தியே இதைப்பற்றி வில்ஸனுக்குக் கடிதமெழுதியதாகச் சொல்லப்படுகிறது.

காமன்ஸ் ஸபையில் ராணுவத்தில் சேரத்தகுந்த கலியாணம் அடைந்தவர்கள் யாவரும், வெளிநாட்டிலிருந்தால் கூட, ப்ரிட்டனில் இருப்பவர்களானால் உடனே ராணுவ உத்யோகஸ்தர் முன் ஹாஜராகவேண்டுமென உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

⁂

ஸப்மேரீன் சண்டை மாத்திரம் வேகம் குறையாமலே நடக்கிறது. அதை யொழிக்க நமது நாவாய்ப்படை ஒன்றால்தான் முடியும்.

⁂

ஜில்லாக் கான்பரன்ஸ்கள் பல இந்த மாதம் நடந்தேறின. மலையாள ஜில்லா சபையில் கொல்லங்கோடு ராஜா அவர்கள் ஆயுதச் சட்டத்தைப் பற்றியும், இந்தியர்க்கு ராணுவ உத்தியோக வாழ்க்கையைப்பற்றியும் பேசினார்; கரூரில் கூடிய திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கூட்டத்தில் ராஜாங்க அதிகாரத்திற்குட்படாத பஞ்சாயத்துகள் ஏற்படுத்த யத்தனங்கள் செய்யவேண்டுமென்று ஸ்ரீ அன்னி பெசண்ட் அம்மையார் பேசினார். தெனலியில் கூடிய குண்டூர் ஜில்லா கான்பரன்ஸில் கனம் ஸ்ரீ ராவ் பஹதூர் ராமசந்திர ராவ் அவர்கள் கிராமவாசமான து ராஜாங்கவிருத்திக்கு ஆதாரமாகும்படி ஒவ்வொரு கிராமவாசியும், தனது தர்மத்தை முற்றுமறியக் கற்கவேண்டுமென வற்புறுத்தினார். ஸ்ரீகாகுளத்தில் கூடிய கஞ்சம் ஜில்லா சபையில் ம-௱-௱-ஸ்ரீ ஆகெல்லா சூர்யநாராயணராவ் பந்துலு அவர்கள் "ஆந்திர இயக்கம்" என வழங்கும் தெலுங்கரது விருத்தியைப்பற்றிய இயக்கம் ஜாதிய லக்ஷணம் என்றுகூறினார்.

⁂

சென்னை மாகாணக்கூட்டம் இம்மாதம் அப்புராதன நகரமாகிய தென்மதுரையிற்கூடியது. ம-௱-௱-ஸ்ரீ கனம் ராவ்பஹதூர் கேசவப் பிள்ளை அவர்கள் அதில் அக்கிராஸனம் வஹித்தார். ஷை கூட்டத்தை வரவேற்க, கனம் ஸ்ரீ இராமநாதபுரத்து ராஜா அவர்கள் வெகு விமரிசையாக மதுரையின் புராதன பெருமையைப்பற்றியும், அதன் தற்காலப் பொலிவைப்பற்றியும் பேசிய பிறகு, ஸமஸ்தான பூமியைப்பற்றிய சட்டம், வைதிகக் கொடைகளைப்பற்றிய சட்டம், லோகல் போர்ட் சட்டம், கிராமபஞ்சாயத்து முதலிய விஷயங்களைப்பற்றி, அத்யத்புதமாகப் பேசினார். ஸ்ரீ கேசவப் பிள்ளையவர்களும் நமது நாடு ஸ்வராஜ்யத்திலுயர நாள் கிட்டியதென்றும், அதற்கொப்ப ஆயுத சட்டத்தை ரத்துசெய்யவும், ராணுவப்பயிற்சியில் இந்தியர்கள் உயரவும் இயக்க முண்டாக்க வேண்டுமென்றும், வேவுகாரச் சிறுவர் கூட்ட முண்டாக்கி, நமது சிறுவர்களின் பெருமையை யுயர்த்தவேண்டு மென்றும், கூலியாட்களை வெளி யேற்றுவதில் தக்க ஆராய்ச்சிக்குகந்த நமது உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்துவதைப்பற்றியும் பேசினார். வீண் கர்வம் வெறுப்புக் கொள்ளாமல், சட்ட சபையங்கத்தினர்கள் உழைப்பது நாட்டிற்குச் சுகமேற்படவே இடந்தருமென்றும், அவ்வாறு நடப்பது இராஜாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் உதவியாக இடமுண்டென்றும் பேசினார். அதற்கு அவர் வாழ்க்கையே நிதர்சனமல்லவா?

கல்விக் கான்பரன்ஸ் மதுரையிற் கூடிய போது பி. டி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள், பள்ளியில் பிள்ளைகளுக்கு இப்போதைக்காட்டிலும் அதிகமாக ரஸாயனப்படிப்பைக் கற்பிக்கவைக்க வேண்டியதென்றும், கல்வியிலாகாவில் கிராண்ட் -இன்- எயிட் சட்டம் மிக்க ஆதரவுடன் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், இந்திய பாஷைகளின் மூலமாகச் சாஸ்திரபாடங்களைச் சொல்லித்தரவேண்டும் என்றும், இந்தியபாஷைக்கும், சாஸ்திரப் படிப்பிற்கும் கேடுண்டாகும்படியாக இங்கிலீஷ் படிப்பிற்கு இடங்கொடுத்தல் தகாதென்றும், சென்னை ஸர்வ கலாசாலையின் ஆலோசனை ஸபையின் செயல்கள் ஊக்கத்துடனும், கல்வியின் அபிவிருத்திக்கும் மாணக்கர்களுடைய ஏற்றத்துக்கும் தக்கபடி நடக்கவேண்டும் என்றும் பேசியிருக்கிறார். இம்மொழிகள் ஆழ்ந்த யோசனைக் கிடந்தரத் தக்கன எனச் சொல்லவும் வேண்டுமோ?

***

ஸ்ரீகாகுளத்தில் கூடிய ஆந்திர கான்பரன்ஸில் அக்கிராஸநாதிபதியாக கனம் ஸ்ரீ ராமசந்திர ராவ் அவர்கள் தெலுங்கருக்குத் தனியாக இராஜதானி அமைக்கப்படவேண்டுமென்றும், அவ்வாறு செய்யப் பல தடைகளிருக்கும் என்றும் பேசினார். ஆந்திர ஸர்வகலாசாலை ஒன்று ஏற்படுத்தமுயல வேண்டுமென்றும், அதற்காக, காசி ஹிந்து விச்வவித்யாலயத்திற்கு நம்மவர்கள் உழைத்தவாறு, தாம் ஊக்கத்தோடு உழைக்க வேண்டுமென்றும் பேசினார். தமது பாஷை பேசாதவரைக் கண்டால் வெறுப்பது என்று எண்ணங் கொள்ளாது தமது நிலையை யுயர்த்திக்கொள்ள ஆந்திரர்கள் உழைப்பது ஸர்வ ஸம்மதமாகும். துரோதம் குடிகொண்டு விட்டால், ஜாதிய கட்டிடத்திற்குத் தக்க அஸ்திவார மேற்படமுடியாது. நமது பொது ஜனங்களுடைய வாக்கு ஒன்றே. அது ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து!

***

தென்னையை நாசஞ்செய்யும் ஒரு வகை வியாதியைப்பற்றிக் கவனித்துக் கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களில் செய்த பிரயத்தினங்களைப்பற்றி விவசாய இலாகா தலைவர்

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

பம்பாய் கவர்ன்மெண்டும், வைஸ் பிரஸிடேண்ட் ஸ்தானமும்.— பம்பாய் கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் ஒரு மெம்பரான கனம் எம். பி. சௌபால், பம்பாய் சட்ட சபையின் வைஸ் பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டிருப்பது, இந்தியரனைவருக்கும் சந்தோஷத்தை விளக்கும் முன்னர் ராஜப்பிரதிநிதிச் சட்ட ஸபைக்கு, ஸர் ஸய்யத் ஆலி இமாம், வைஸ் பிரஸிடெண்டா யிருந்திருக்கிறார் —வங்காள சட்ட சபையில் கனம் ஷம்ஸுல் ஹுடா ஒரு சமயம் வைஸ் பிரஸிடெண்டாக நியமனம் பெற்றிருக்கிறார்.

***

தீக்குச்சிகள் இறக்குமதி.—சென்ற 1915-1916ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்குமேல் விலையுள்ள திக்குச்சிகள் இந்தியாவில் இறக்குமதியா யிருக்கின்றன. வெளி தேசங்கள் எல்லா வற்றிலிருந்தும், இந்தியாவுக்கு இறக்குமதியான திக்குச்சிகளிலே 100-க்கு 83 பங்கு ஜப்பானிலிருந்து வந்தனவெனத் தெரிகிறது.

---

1915ஆ டிஸம்பர் மாதத்திய ரிபோர்ட்டில் விவரித் திருக்கிறார். இப்பிரயத்தினங்களால் அவ் வியாதியைக் குறைக்க வழி ஏற்பட்டதாகவும், அதற்கு அவ்விலாகா, ஜனங்களுடைய உதவியை நன்குபெற்றதாகவும் தெரிகிறது. இம்முறைகளை அனுஸரிப்பது தென்னையை யழிக்கும் வியாதியை யழிக்க ஏற்ற ஸாதனமாகும்.

***

இந்தியாவில் ஸர்வகசாலைக்குமேல் ஸர்வ கலாசாலைகள் ஸ்தாபனஞ் செய்யப்படுவது ஸந்தோஷத்தைக் கொடுக்க, ஸிலோன் ராஜாங்கத்தில், லங்கை த்வீபத்திற்கு ஸர்வ கலாசாலை ஆவச்யகமில்லை என அந்த த்வீபத்துக் கவர்ன்மெண்டார் தீர்மானித்தது எல்லார்க்குந் துன்பத்தை யுண்டாக்கும். சீக்ரத்தில் இக்குறையைத் தீர்ப்பதே அந்நாட்டில் படிப்பிற்குப் பெருமை தரும்.



காலஞ்சென்ற கிச்சனர் பிரபு